பர்மா-மலாய் ப-1-3 இலங்கை 5 சதம்

TAMIL MANI REGD NO. M. 3384

தமிழ் மணி

எல்லாரு மோர்குலம் எல்லாருமோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்

[வாரப் பதிப்பு]

எல்லோரு மோர்நிறை எல்லோரு மோர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்—பாரதி

மணி 4
ஓசை 23

சென்னை—பிரமாதி௵ சித்திரை௴ 3௳ ஞாயிற்றுக்கிழமை (16—4—39)

விலை
அரையணா

மீண்டும் சர்தார் வெற்றி!



சர்தார் வல்லபபாய் பட்டேல் ஒருவித சர்வாதிகாரப் போக்குடையவர். என்றாலும், அவருக்குச் சரியெனப் பட்டதை அவர் சாதித்தே தீருவார். அவருடைய பிடிவாதமே அவர் வெற்றிக்கு மூலகாரணமாக இருந்துவந்திருக்கிறது. பர்டோலி சத்தியாக்கிரக வெற்றிக்குச் சர்தாரே காரணம்; அதேபோல் ராஜகோட் போறுப்பாட்சிப் போராட்ட வெற்றிக்கும் சர்த்தாரே காரணமாயிருந்தார். ஆனால், ராஜகோட் மன்னர் வீறைகக் குதர்க்கம் பண்ணினர். இதனால் காந்திஜி தலையிடவேண்டியதாயிற்று. பெடரல் கோர்ட் பிரதம நீதிபதி வரையில் அந்தத் தகராறு சென்றது. சர்தார் பட்டேல், ராஜகோட் மன்னருடன் செய்துகொண்ட ஒப்பந்தமே சரியென நீதிபதி தீர்ப்புச் செய்தும், சதுனிமாபாக்கள் பேச்சைக்கேட்டு, மீண்டும் ராஜகோட் மன்னர் தகராறு செய்ய ஆரம்பித்திருக்கிறர். அதற்காக முஸ்லீம்களைத் தட்டிக் கொடுத்துவந்தனர். ஆனல், முஸ்லீம்களைச், சர்தார் சமரசஞ் செய்து வெற்றி பெற்று விட்டார். ராஜகோட் மன்னர் இனிமேல் இறங்கி வருவதைத் தவிர, அவருக்கு வேறு வழியில்லை.

பிரஜைகள் என்ன சொல்லுகிறார்கள்!

சீக்கிரத்தில் வெளிவருகிறது!!

ஆஹா! எவ்வளவு தங்கமான அரசன்! நிலாவுக்கு ஒப்பிடக்கூடிய அரசன்! இராஜாக்களெல்லாம் மஹா ராஜாக்கள்தான்! ஆனால் புரூரவ சக்கிரவர்த்தி மட்டும் நம்முடையவரே.

—என்று குடியானவர்கள் சொல்லுகிறார்கள்.

ஆட்டத்திலும், பாட்டுகளிலும், காதலிலும் ஆசீர்வாதத்திலும், இருதயத்திலும், பேச்சிலும் புரூரவ சக்ரவர்த்திபோல் தங்கள் கணவன் இருக்கவேண்டும்.

—என்று பெண்கள் நினைக்கிறார்கள்.

அவ்விதமாக, எல்லோராலும் போற்றப்பட்டவர்

புரூரவ சக்ர வர்த்தியே

ஜயப்பிரதா

(தெலுங்கு)

நடிகர்கள்: ஸி. எஸ். ஆர். யசோதா, லலிதா, சம்பூர்ணா—முதலியோர்

டைரக்ஷன்: சி. நரசிம்ம ராவ் சங்கீத டைரக்ஷன்: மாஸ்டர் எஸ். ராஜேஸ்வர ராவ்

எமது டாக்கி கீதங்களை H. M. V. ரிக்கார்டுகளில் கேளுங்கள்

For Bookings:—

Sree Sarada Rayalaseema Films, Ltd.,

6, HARRINGTON ROAD CHETPET, MADRAS.

சொக்கநாதன் * தொடர் கதை

-: யுத்த முழக்கம் :-

தஞ்சையிலிருந்து புறப்பட்ட ரங்கனின் குதிரை, வழியில் திடீரென வெருண்டு பாய்வதைக்கண்ட ரங்கன், வெகு சாதுர்யமாகக் குதிரையை அடக்கினான். சிறிது தூரஞ்சென்று குதிரையை நிறுத்திவிட்டு, குதிரையிலிருந்து கீழே இறங்கினான். ரங்கனுக்கு ஒரு சந்தேகம்; எதிரிகள் ஏதேனும் சதி செய்யப் பதுங்கியிருக்கிறார்களோவென்று சுற்று முற்றும் பார்த்தான். அவன் சந்தேகித்தது போலவே இருவர் ஒரு புதருக்குள் மறைந்திருந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களின் வெண்மையான ஆடையையும், தலைப்பாகையையும் இருளில் கண்டே குதிரை வெருண்டது. ஆனால், அவர்கள் குதிரையைக் கவனிக்கவில்லை. குதிரைமீது அவ்வளவு அவசரமாகப் புறப்பட்டுச் சென்றது, தஞ்சையில் இதுவரையில் பல திருவிளையாடல்கள் செய்து வந்த ரங்கன் என்பதையும் அவர்கள் அறியவில்லை. ரங்கன் சாதுர்யமாகப் புதருக்கருகில் சென்று, அந்த இருவரும் என்ன பேசிக்கொள்ளுகிறார்களென்பதை உற்றுக் கேட்டான். அவர்கள் பேசிக்கொண்டதிலிருந்து அந்த இருவரையும் ரஞ்சிதமே அங்கு அனுப்பிவைத்தாளென்பதை அறிந்துகொண்டான். ரங்கன், அல்லது, மதுரை வீரர்கள் தஞ்சையிலிருந்து தப்பியோடினால், அதை அறிந்து உடனே அங்கப்பனுக்குத் தெரிவிக்கும்படி ரஞ்சிதம் அவர்களுக்கு உத்திரவு போட்டிருந்தாள். மதுரை வீரர்கள் ஐவர்; ஆகவே, ரங்கன் ஒருவனைப்பற்றி அவர்கள் சந்தேகிக்கவில்லை. ஐந்து மதுரை வீரர்கள் வரக்கூடுமென அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். மதுரை வீரர்கள் அனைவரும், அந்த இருவரும் அங்கு வருவதற்கு முன்னடியே தப்பிப் போய்விட்டது, அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் பேசிக்கொண்டதை ரங்கன் உற்றுக் கேட்டபின், இனிமேல் அங்கு தாமதிப்பது ஆபத்தாக வந்து முடியுமென எண்ணி, அரவஞ்செய்யாமல் அங்கிருந்து புறப்பட்டான். குதிரைமீது ஏறிக்கொண்டு குதிரையை மதுரை நோக்கி வேகமாக தட்டிவிட்டான்.

ரங்கன் ஏறிச்சென்ற குதிரை அதிக வேகமாகப் பறந்து சென்றது. புதருக்குள்பதுங்கியிருந்த இருவருக்கும், ரங்கன் வந்ததும் தெரியாது, போனதும் தெரியாது. அவர்கள், மதுரை வீரர்கள் ஐவர் வரவையே எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். இதே சமயத்தில், காட்டினுள்ளிருந்த பொன்னன் குடிசைக்குமுன் வேறொரு குதிரைவந்து நின்றது. குதிரைமீது ஒரு அழகிய வாலிபன் உட்கார்ந்துகொண்டிருந்தான். அவன் அதிகார தோரணையில் "குடிசைக்குள் யார்? வெளியே வா..." என்றான்.

இந்த சப்தத்தைக்கேட்டுப் பொன்னன் திடுக்கிட்டுப்போனான். இந்தக் குரலை அவன் கேட்டதே இல்லை. புதிதாக வந்தவன் யார், எதற்காக வந்திருக்கிறான், இதுபோன்ற சந்தேகங்கள் பொன்னனுக்கு ஏற்பட்டன. அவன் உடனே பதில் கூறாமல் அயர்ந்து தூங்குவதுபோல் படுத்துக்கொண்டான். வெளியில் நின்ற குதிரை வீரன், மீண்டும் அதட்டிக் கூப்பிட்டான். பதில் கிடைக்காததால் குதிரையிலிருந்து இறங்கி கதவைப் பலமாகத் தட்டினான். பொன்னன் அப்பொழுதுதான் திடுக்கிட்டு விழிப்பவன்போல் "யாரையா அது?...இந்த நேரத்தில் பேய்போல் வந்து......என்னைத் தொந்திரவு செய்கிறாய்?......" என்றான்.

"அடே! காவலாளி......வா வெளியே......குடிசைக்குள் என்ன செய்கிறாய்?"

"யாரையா நீ?... அடே-புடேயென்று தடபுடலாகப் பேசுகிறாய்?" என்று கடிந்துகொண்டே கதவைத் திறந்தான். இருளாக இருந்தபோதிலும வெளியில் ஒரு வாலிபன் நிற்பதைக் கண்டான்.

"நீ யாரையா?...இந்த நேரத்தில் இங்குவந்து என்னைத் தொந்திரவு செய்கிறாய்?

"ஏ கிழவா?...நான் யாரென்பதை அறிந்து பேசு...வாயில் வந்தபடி உளறாதே!..."

"அது இருக்கட்டும் ஐயா, நீ யார்...என்னிடம் அதிகாரஞ் செய்ய வருகிறாய்...?"

"நான் யார் தெரியுமா?...தஞ்சை அரசரின் அந்தரங்கக் காரியதரிசி... ராணுவத்தில் உளவு பார்க்கிறவன்."

"ஆனால், பேச்சிலிருந்து நான் அப்படி நினைக்கவில்லை...பேச்சும் என்னமோ போலிருக்கு......ஒரு ஆண்பிள்ளை..." எனப் பொன்னன் இழுத்தான். அவன் பேச்சும், இழுப்பும் வந்தவனைத் திடுக்கிடச் செய்தது. அவன் அதிகாரத்தொனியும் சற்றுக் குறைந்தது.

"இருக்கட்டும்......கிழவா......நீ இங்கே என்ன செய்கிறாய்?...உன் வேலை என்ன?..."

"நான் இந்தக் காட்டுக்குக் காவல்காரன்...தஞ்சை மகாராஜா ஊழியன்..."

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்...அது இருக்கட்டும்! தஞ்சையிலிருந்து, சில சதிகாரர்கள் இவ்வழியாகக் குதிரைகளில் சென்றார்களா?..."

"அப்படி யாரும் இப்பக்கம் வரவில்லையே......நான் காணவுமில்லை."

"சரி போகட்டும்...தனிமையாக ஒரு வாலிபனாவது இப்பக்கம் வந்தானா?"

இல்லை...நான் கண்ட வாலிபன் நீங்கள்தான்...வேறு யாரும் இங்கும் வரவில்லை..."

"நிச்சயந்தானா?...உள்ளதைக் கூறு....இல்லாவிட்டால்.....தஞ்சை அரசரிடம்..."

"ஏனய்யா?...எனக்கு என்ன பைத்தியமா?...உள்ளதைச் சொல்ல நான் ஏன் பயப்படவேண்டும்... யாரும் இப்பக்கம் வரவில்லை... யாரும் என்னைத் தொந்திரவு செய்யவில்லை...நீதான் வந்து..."

"சரி...வேறு யாராவது இப்பக்கம் வந்தார்களா?"

"யாரும் வந்தது கிடையாது..." என்று பொன்னன் அழுத்தமாகக் கூறினான்.

வாலிபனுக்கு ஒன்றும் பதில் பேச முடியவில்லை. பொன்னன் கூறுவது உண்மையாக இருக்கலாமென நினைத்தான். உடனே அங்கிருந்து திரும்பி அவன் குதிரை நின்ற இடத்துக்குச் சென்றான். போகும்போதே தரையைக் கூர்ந்து கவனித்துக்கொண்டு சென்றான். அவன் கூரிய கண்களுக்கு குதிரையின் கால் அடையாளங்கள் தெரிந்தன...உடனே குதிரைமீது ஏறிக்கொண்டு வேகமாகக் குதிரையை ஓட்டினான். சற்றுத் தூரத்தில் புதருக்குள் ஒளிந்திருந்த இருவரும் குதிரையின் சப்தம் கேட்டுத் திடீரெனப் புதருக்குள்ளிருந்து வெளியே பாய்ந்தனர். உருவிய வாளுடன் "யாரது நில்...இன்றேல் உன் உயிர் போய்விடும்" என்றார்கள். குதிரை வீரன் குதிரையை நிறுத்தினான்...

"நீங்கள் யார்?...இங்கே என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"அதைப்பற்றி நீ கேட்கத்தேவை இல்லை...நீ யார்?..."

"நான் தஞ்சையிலிருந்து வருகிறேன்...நீங்கள் என்னை அறிந்து கொள்ளவில்லையா?..." வென்று வாலிபன் சிரித்தான்.

"ஆகா....நீங்களா?......அம்மா... என்ன?...எப்போது வந்தீர்கள்?..."

"சரி போகட்டும்...மதுரை சதிகாரர்களைக் கண்டீர்களா?...அவர்கள் தப்பி ஓடிவிட்டார்களென்றே நினைக்கிறேன்..."

"இல்லை...என்னமோ......நீங்கள் கொடுத்த கட்டளைப்படி நாங்கள் இங்கேயே காத்திருக்கிறோம்."

"அட முட்டாள்களே! புதருக்குள்ளிருந்துகொண்டு பார்த்தால் என்ன தெரியும்? நீங்கள் பலே வீரர்கள்! சனியன்களே போய்த் தொலையுங்கள்!...மதுரைக்குப் போகும் வழி இது ஒன்றுதானா? எத்தனையோ வழிகளுண்டு...பல வழிகளிலும் போய்ப் பார்க்காமல் இங்கு உட்கார்ந்து கொண்டிருந்து என்ன பயன்?... போங்கள்..." என்று அவர்களை வெருட்டிவிட்டு, அந்தக் குதிரை வீரன் மீண்டும் தஞ்சையை நோக்கிச் சென்றான். அவன் போவதையும், வருவதையும் குடிசையிலிருந்த பொன்னன் கூர்மையாகக் கவனித்தான். அவன் மனம் நிம்மதியடையவில்லை. அவன் ரங்கனைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தான். ரங்கனைத் தேடிவந்த இந்தப் புதிய பேர்வழி யாரென்பதை அறிந்து கொள்ள விரும்பினான். ஆகவே, தஞ்சையை நோக்கித் திரும்பிய குதிரை வீரனை ரகசியமாகப் பின் தொடர்ந்து சென்றான்.

புதிய குதிரை வீரன் காட்டின் வழியாகத் தஞ்சையை அடைந்தான். தஞ்சைக்குத் தெற்கேயுள்ள ஒரு வீட்டினுள் சென்று மறைந்தான். அங்கிருந்து ஒரு பெண் ரூபமாக வெளி வந்தாள். பொன்னனின் சந்தேகம் தெளிந்தது. ஆதியிலேயே அந்த வீரன் ஆண்பிள்ளையல்ல. ஒரு பெண்ணேயென்று பொன்னன் சந்தேகித்தான். பொன்னன் சந்தேகித்தது மெய்; மதுரை வீரனைப்போல் மாறு வேஷம் போட்டுக்கொண்டு வந்தது ரஞ்சிதம். அவள் ரங்கனைப் பிடிக்கச் சதி செய்தாள். அவள் விரித்த வலையில் ரங்கன் அகப்படாமல் தப்பித்துக்கொண்டு மதுரை போய்ச் சேர்ந்தான்; ஏமாற்றமடைந்து ரஞ்சிதம் திரும்பினாள். ரங்கன் ஒருவன் அவள் வலையில் சிக்கினாலும் போதும், தஞ்சையை ஜெயித்துவிடலாமென ரஞ்சிதம் நினைத்தாள். அவள் எண்ணத்தில் மண்விழுந்தது.

மதுரையிலிருந்து தஞ்சைக்குத் தூதுசென்ற வீர சிங்கனும், மற்ற மதுரை வீரர்களும் பல தினங்களாகியும் மதுரை திரும்பாமலிருந்தது, சொக்கநாத நாயக்கருக்கும், ராணி மங்கம்மாளுக்கும் ஆச்சரியத்தையும், சந்தேகத்தையும் உண்டுபண்ணியது. ஆனால், வீரசிங்கனின் சாதுர்யத்தையும் ரங்கனின் திறமையையும்

(அடுத்த பக்கம் பார்க்க)

உங்கள் டாக்டர்

உங்கள் நோயைப்பற்றி நீங்களே தெரிந்துகொள்ளாமலிருப்பது ஆபத்திற்கு இடமாகலாம். இருமல், இளைப்பு, க்ஷயம், மூலரோகம், ஊரல், அரிப்பு, பத்து முதலான வியாதிகளின ஆரம்பம், அவஸ்தைகள், சிகிச்சைகளை ஒரு டாக்டரைப்போல் எடுத்து சொல்லும் நோட்லாக் இனும்.

தண்டபாணி வைத்தியசாலை,
பழனி, (S. India).

யுத்த முழக்கம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

இருவரும் அறிந்திருந்தார்கள். ஆகவே, இவர்கள் பயப்படுவதற்கு ஒரு காரணமுமில்லை. ஆனால், இவ்வளவு தாமதத்துக்குக் காரணமென்னவென்பதை சொக்கநாத நாயக்கரால் அறிந்துகொள்ளமுடியவில்லை. அவர் ரங்கனின் பதிலை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். ரங்கனிடமிருந்து சொக்கநாத நாயக்கருக்கு ஒரு தகவலும் கிடைக்கவில்லை. அதிலிருந்து மதுரை வீரர்கள் சீக்கிரத்தில் திரும்பிவிடக்கூடுமென அவர் எண்ணினர். அவர் கருதியதுபோல வீரசிங்கனும், அவருடன் சென்ற மதுரை வீரர்களும் மதுரை போய்ச்சேர்ந்தனர். வீரசிங்கன் மதுரை சேர்ந்ததும், சொக்கநாத நாயக்கரைக் கண்டு சகல விவரங்களையும் கூறினர். அவர்களுக்கு நேர்ந்த ஆபத்துக்களையும், அங்கப்பன் செய்த அற்பத்தனமான சதிகளையும் எடுத்துக்கூறினர். ரங்கனும், கமலமும் வெகு சாதுர்யமாக அவர்கள் உயிர்களைக் காப்பாற்றியதையும், தஞ்சையிலுள்ள சில வஞ்சகர்களைத் தந்திரமாக ஒரு அந்தரங்க அறைகளில் அடைத்து வைத்திருப்பதையும் விவரமாக எடுத்துச் சொன்னர். சொக்கனுக்குத் தஞ்சை சதிகாரர்கள்மீது அடங்காத கோபம் வந்தது. என்றாலும், மோகன எண்ணமும், அவளுக்கு என்ன ஆபத்து நேரிடுமோவென்ற பயமும் அவர் கோபத்தை தணித்தது. சொக்கனும், வீரசிங்கனும், இனிமேல் என்ன செய்வதென்பதைப்பற்றி நெடுநேரம் ஆலோசித்துக் கொண்டிருந்தார்கள். முடிவில், உடனே யுத்தத்துக்குப் புறப்படுவதெனத் தீர்மானித்தார்கள். இதர ராணுவ வீரர்களையும், கலந்து ஒரு முடிவுக்கு வரும் வரையில் யுத்த முடிவைப்பற்றி யாருக்கும் கூறவேண்டாமென சொக்கன் வீரசிங்கனைக் கேட்டுக்கொண்டார்.

"நீங்கள் தஞ்சையிலிருந்து வரும்போது ரங்கன் உங்களிடம் என்ன கூறியனுப்பினன்?..."

"யுத்தந்தான்! சந்தேகமென்ன? யுத்தமொன்றே தஞ்சையைக் காப்பாற்ற இப்பொழுதுள்ள ஒரே வழி. வேறு மார்க்கமே இல்லை..."

"சரிதான், தஞ்சை அரசருக்காகவே யோசித்துக்கொண்டிருக்கிறேன்."

"நீங்கள் யோசிப்பதால் ஒரு பயனுமில்லை! தஞ்சையையும், அரசரையும், அரசர் குடும்பத்தினரையும் பாதுகாக்க ஒரே வழி யுத்தந்தான்! வேறு வழி கிடையாது..."

"சரி போகட்டும், பாட்டி மங்கம்மாளைக் கண்டு பேசிவிட்டு அப்புறம் வாருங்கள்..." என்று கூறி, வீரசிங்கனை சொக்கன், ராணி மங்கம்மாளிடம் அனுப்பி வைத்தார்.

வீரசிங்கனும், ராணி மங்கம்மாளைக் கண்டு, தஞ்சையில் நடந்த சகல சதிகளையும் எடுத்துக் கூறினர். மங்கம்மாளுக்கு அந்தச் செய்திகளைக் கேட்டு அதிக வருத்தம். சொக்கனுக்கு மோகனவை எப்படி மணஞ் செய்து வைப்பதென்ற கவலையே மதுரை ராணிக்கு அதிகமாக இருந்தது. வீரசிங்கனிடம் யோசனை கேட்டாள்.

"மோகன, சொக்கனை மணந்தே தீருவாள்; அதற்குச் சந்தேகமில்லை. அதைப்பற்றி நீங்கள் பயப்படவேண்டியதுமில்லை..."

"நீங்கள் அவ்வளவு உறுதியாகக் கூறுவதற்கு ஏதேனும் காரணமிருக்குமென்றே நினைக்கிறேன்"

"காரணம் இல்லாமலில்லை...ரங்கன் அந்த விவாகத்தை எப்படியும் நிறைவேற்றியே தீருவான்...அதைப்பற்றி எனக்குச் சந்தேகமே இல்லை."

"ரங்கன? ரங்கனுக்கு அவ்வளவு சாதுர்யமுண்டா?"

"அவன் எங்கள் எல்லோரையும் விட சாமர்த்தியசாலி...அவன் யார் தெரியுமா? என் பேரன்...அதாவது தஞ்சை ராணுவத் தளகர்த்தராயிருந்த எனது உறவினரின் பேரன்..."

"உங்கள் பேரன?...ரங்கன் தஞ்சைத் தளகர்த்தரின் பேரன? எனக்கு ஒன்றுமே தெரியாதே!"

"ஆமாம், எனக்கும் தெரியாது... தஞ்சைக்குச் சென்றபின் தான் தெரிய வந்தது..."

"ரங்கனுக்கு தஞ்சையென்றால் அவனை நாம் நம்பலாமா?"

"முழுவதும் நம்பலாம்...தஞ்சையின் நன்மைக்காகவே அவன் இவ்வளவு பாடுபடுகிறான்...மேலும், அவன் வீராதி வீரன்...சத்தியமானவன்..."

"ரங்கனை இன்னமும் காணவில்லையே?"

"அவன் எங்களை வழியனுப்பிவிட்டுத் தஞ்சையிலேயே சில ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறான்...சீக்கிரத்தில் திரும்பி விடுவான்..."

"சரி, அப்படியானால் ரங்கன் வந்தபின்தான் இனிமேல் நடக்கவேண்டிய காரியங்களைப்பற்றி யோசிக்க வேண்டும்..."

"ஆமாம்...ரங்கனும் சீக்கிரம் வந்து விடுவான்..."

"சொக்கனைக் கண்டீர்களா?"

"ஆம், கண்டேன்..."

"அவன் என்ன சொன்னன்?..."

"சொல்வதென்ன? உங்களைக் கண்டு பேசிவிட்டு வரும்படி என்னை அனுப்பி வைத்தார்..."

"நானும் சொக்கனைக் கண்டு பேசியபின் உங்களை மீண்டும் அழைத்து யோசித்துக்கொள்ளுகிறேன்..." என்றாள் ராணி மங்கம்மாள். வீரசிங்கன் மங்கம்மாளிடம் விடை பெற்றுக் கொண்டு திரும்பினர்.

இரண்டொரு தினங்களில் ரங்னும் மதுரை வந்து சேர்ந்தான். இதுவரையில் ரங்கன் யாரென்பது அரண்மனையில் யாருக்குமே தெரியாது. இப்போது ரங்கன் யாரென்பதை சகலரும் அறிந்து கொண்டார்கள். ரங்கனின் சாதுர்யத்தை சகல மதுரை ராணுவ வீரர்களும் தெரிந்து கொண்டனர். ஆகவே, ரங்கனை யாவரும் மரியாதையாக வரவேற்றனர். ரங்கன் மதுரை வந்ததும், நேரடியாக சொக்கநாத நாயக்கரைக் கண்டு அவருடன் நெடுநேரம் அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருந்தான். அதன்பின் சொக்கன், வீரசிங்கனையும், முக்கியமான ராணுவத்தளகர்த்தர்களையும் வரவழைத்து அவர்களுடன் அந்தரங்கமாக ஆலோசனை செய்தார். சகல மதுரை வீரர்களும், தஞ்சையுடன் யுத்தஞ் செய்தே தீருவதென உறுதியாகக் கூறினர்கள். சொக்கநாதநாயக்கருக்கு வேறுவழியில்லை; இந்த யுத்தத்துக்கு ராணி மங்கம்மாளின் ஆதரவைப் பெறும்படி சொக்கன் வீரசிங்கனை மங்கம்மாளிடம் அனுப்பி வைத்தார்.

வீரசிங்கன் மங்கம்மாளிடஞ் சென்று, மதுரைராணுவத் தளகர்த்தருடன் ஆலோசித்து சொக்கன் தீர்மானித்திருக்கும் யுத்தத்தைப்பற்றிக் கூறினர். யுத்தத்தைக் கேட்ட மங்கம்மாள் ஆரம்பத்தில் திடுக்கிட்டாள். ஆனல், வீரசிங்கன் சாதுர்யமாக யுத்தந் தொடர வேண்டியதின் அவசியத்தை எடுத்துக் காட்டியதும், மங்கம்மாள் ராணியும் அதற்கு ஒப்புக் கொண்டாள். உடனே சொக்கனையும், ரங்கனையும் அழைத்து அவர்களுடனும், சிறிது நேரம் ஆலோசித்தாள். தஞ்சையுடன் யுத்தந் தொடுத்தே தீருவதென யாவரும் ஒரு மனப்பட்டுத் தீர்மானித்தார்கள். அந்த யுத்தத்தையும் சீக்கிரத்தில் ஆரம்பித்து விடுவதே நல்லதென்று முடிவுக்கு வந்தார்கள். ஏனெனில், தஞ்சை யுத்தத்துக்குத் தயாராவதற்குமுன் அதைத் திடீரெனத் தாக்கி, தஞ்சை வஞ்சகர்களைக் கொன்று, தஞ்சையைக் காப்பாற்றுவதே நல்லதென்று முடிவு செய்தார்கள். தஞ்சையுடன், மதுரை யுத்தஞ்செய்தே தீருமென்பது சொக்கனுக்குத் தெரியும். ஆகவே அவர் தஞ்சையிலிருந்து திரும்பி வந்ததும், மதுரை ராணுவங்களை நேரில் பார்வையிட்டு, யுத்தத்துக்கான ஏற்பாடுகள் யாவற்றையும் ஏற்கனவே செய்து வைத்திருந்தார். யுத்தஞ் செய்வதென்று முடிவு செய்ததும், அவர் உடனே மதுரை ராணுவங்களை யுத்தத்துக்குத் தயாராகும்படி உத்திரவு போட்டார். மறுநாளே மதுரை ராணுவங்கள் யுத்தத்துக்குத் தயாராக அணி வகுத்து தஞ்சையை நோக்கிப் புறப்படத் தயாராயிருந்தன. ராணுவங்கள் யாவும் ஒன்று சேர்ந்ததும், சொக்கன் அவர்களுக்கு வீரத்தைக் கொடுக்கக் கூடியவிதமாக இரண்டொரு வார்த்தைகளில் யுத்தஞ் செய்யப் புறப்பட்டதின் காரணங்களை விளக்கிக் கூறினர். "ஆனல் யுத்த காலத்தில் தஞ்சை அரசருக்கோ, அல்லது, அரசர் வம்சத்தினருக்கோ, எந்த விதமான கெடுதலும் செய்யக்கூடாது. அவர்கள் உயிருக்கு எந்தவிதமான ஆபத்தையும் உண்டுபண்ணமல் பார்த்துக் கொள்ளும்படி உங்கள் ஒவ்வொருவரையும் எச்சரிக்கை செய்கிறேன்" என்றார். மதுரை ராணுவங்கள், சமுத்திரம் போல் ஒன்று திரண்டு, தஞ்சையை நோக்கிப் படையெடுத்துச் சென்றன.

(தொடரும்)

TRADE MARK Registereh.

இழுப்பு இருமலுக்கு ஸ்டாக்ஸ்:—
சுவாசகாச நிவாரணி
கைகண்ட ஔஷதம்
எங்கும் கிடைக்கும்.
ஜி. எஸ். ஸ்டியர்ஸ் கம்பெனி'
21, எர்ரபாலு செட்டி, வீதி, மதராஸ்.



மணத்திலும் குணத்திலும் சிறந்தது
நீபா
(வேப்பம், நீம், மார்கோசா.)
சோப்
GANGA WORKS ADYAR MADRAS.

தஞ்சாவூர் ஜில்லா ஏஜண்டு:—
ஈஸ்டேர்ன் மெர்கன்டைல் ஏஜென்ஸி, பஜார் தெருவு, கும்பகோணம்.

இனம்! 'சிற்றின்ப சாகரம்' புஸ்தகம் இனம்!!

அந்தந்த ஊருக்கேற்ற தபால் ஸ்டாம்புகள் 2 அணவுக்கு வைத்து திருத்தமாய் முழு விலாசம் எழுதி அனுப்புவோருக்கு ஸ்திரீ - புருஷ இன்பம், சதிபதிகளின் இல்வாழ்க்கை, ஆரோக்கியமான சந்ததி பெறும் வழி, கர்ப்பத்தடை, ஸ்திரீ-புருஷ உண்மைக் காதலை அறிந்து இன்பம் அனுபவித்தல், கல்யாண வைபவம், காதல் வெற்றி முதலிய அனேக சிற்றின்ப ரகசியங்களை எடுத்துக்காட்டும் "சிற்றின்ப சாகரம்" புஸ்தகம் ஒன்று இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—மலையாள வைத்திய நிலயம்,
தபால் பெட்டி நெ. 53, மதராஸ். (T. M.)

1948-ம் வருடத்துக்குள்...?

சர்வாதிகாரி கனவு

ஹிட்லர் எழுதிய "மெய்ன் கெம்ப்' என்னும் புஸ்தகத்தின்படியே ஹிட்லர் இன்று நடந்துவருகிறார். அவர் போட்டிருக்கும் யுத்தத் திட்டமும் அதுவே. அவருடைய திட்டத்தை அவர் ரகசியமாக மூடி வைக்கவில்லை. பகிரங்கமாகவே கூறிவருகிறார். சென்ற வருடம் செப்டம்பர் மாதம் அவருடைய திட்டத்தை அச்சிட்டு, அதைப் பகிரங்கமாக ஸுடேடன் பிரதேசங்களில் விநியோகஞ்செய்து வந்தார். ஸுடேடன் கிளர்ச்சிக்கு அவர் பிரசாரமே காரணம். அவர் அச்சிட்டுப் பிரசுரித்து வந்த துண்டு பிரசுரங்களில் என்ன கூறியிருந்தார் தெரியுமா? "ஸுடேடன் பிரதேசங்கள் மீது ஹிட்லர் படையெடுத்து வருவது நிச்சயம். ஸுடேடன்மீது படையெடுப்ப

ஹிட்லருக்குப் பயந்து, முனிச்சில் துரோகஞ்செய்த பிரிட்டிஷ் முதன் மந்திரி சேம்பர்லேன். பிரிட்டனையும் ஜெயிக்க ஹிட்லர் திட்டம் போட்டிருப்பதை அறிந்தும் ஹிட்லரை எதிர்க்க இன்னமும் தைரியமில்லை.

தோடுமட்டுமல்ல; ஐரோப்பா முழுவதையும் ஜெயித்து, உலகத்தையே ஜெயிக்க ஹிட்லர் தீர்மானித்திருக்கிறார். ஹிட்லரை எதிர்க்க யாராலும் முடியாது'' என்பதே அந்தத் துண்டுப் பிரசுரங்களின் சுருக்கம். இத்துடன் ஐரோப்பாவின் தேசப் படத்தையும் பிரசுரித்து, அதில் ஹிட்லர் படிப்படியாக ஜெயிக்கப் போகும் தேசங்களையும் தெளிவாகச் சுட்டிக் காட்டி இருந்தார்கள். ரைன்லந்து, ஆஸ்திரியா, ஸுடேடன், ஜெக்கோ, டான்ஜிக், மெமல் முதலிய பிரதேசங்களையே முக்கியமாக அதில் குறிப்பிட்டிருந்தனர். அந்தப் பிரசுரத்தில் காட்டியபடி சகல தேசங்களையும் ஹிட்லர் பிடித்துக் கொண்டார். இன்னமும் பாக்கி இருப்பவை சில பெரிய தேசங்கள்தான். அந்தத் தேசங்களையும் கைப்பற்ற அவர் படையெடுத்தே தீருவாரெனத் தெரிகிறது.



ஐரோப்பாவை நசுக்கி, ஐரோப்பாவையும், ஆசியாவையும் ஜெயிக்கக் கனவு காணும் ஹிட்லர். அவர் இன்றே ஐரோப்பிய தேசங்கள்மீது சவாரி செய்ய ஆரம்பித்துவிட்டார். ஐரோப்பிய ராஜ தந்திரிகள் ஹிட்லருக்குப் பணிந்து போகிறார்களேயொழிய அவரை எதிர்க்க அவர்களுக்கு ஆண்மையில்லை.

ஜனநாயகத்தைக் கேலி செய்யும் சர்வாதிகாரிகள், ஐரோப்பாவை நாஜியர் மயமாக்கிவிடக் கனவு காண்கிறார்கள். அதற்காக ஹிட்லர் ஒரு திட்டம் போட்டிருக்கிறார். அந்த திட்டத்தின்படியே அவர் வேலைசெய்து வருகிறார். அதில் வெற்றியுமடைந்திருக்கிறார். ஆகவே, ஹிட்லர் போக்கில் விட்டு விட்டால் அவர் வெற்றியடைவது நிச்சயம். படத்தில் காட்டியபடி ஐரோப்பா வெங்கும் ஜேர்மனி ஆதிக்கம் ஏற்பட்டு விடுவது உறுதி. இதுதான் ஹிட்லரின் கனவு!



ஸுடேடன் பிரதேசத்தில் நாஜியர் வெளியிட்ட துண்டு பிரசுரத்தில் கண்ட ஐரோப்பிய தேசப் படம். இதில் குறிப்பிட்டுள்ள தேசங்கள் அனைவற்றையும் 1948-ம் வருடத்துக்குள் ஜெயித்துவிட ஹிட்லர் கனவு காண்கிறார். ஐரோப்பா முழுவதையும் ஒரு அம்மாமி அப்பளமென ஹிட்லர் நினைத்துக்கொண்டார்போலும்!

அம்மாமி - - அப்பளமா ?

சேம்பர்லேன் நடுக்கம்!

ஸுடேடன்மீது ஹிட்லர் படையெடுத்துச் செல்லத் துணிந்தபோது தான் சேம்பர்லேன் மூனிச்சுக்குப் பறந்து போனார். அவர் போவதற்கு முன், ஜெக்கோ மந்திரிகள், ஸுடேடனில் நாஜியர் அச்சடித்து விநியோகஞ்செய்த துண்டு பிரசுரங்களை அவருக்கு அனுப்பிவைத்திருந்தார்கள். சேம்பர்லேனுக்கு அந்தத் துண்டு பிரசுரங்களைக் கண்டதுமே நடுக்கம்! அவற்றை ஹிட்லரிடம் எடுத்துச்சொல்லக்கூட அவர் பயந்தார். முடிவில் மூனிச்சில் அவரே ஹிட்லர திட்டத்துக்கு உதவியாக இருந்து, ஸுடேடனைத் தத்தஞ் செய்தார். ஹிட்லர் ஸுடேடனோடு நின்றுவிடவில்லை; ஜெக்கோவிலும் பேர்பாதியை விழுங்கிவிட்டார். சேம்பர்லேனும், டலாடியரும் மூனிச்சில் உறுதியாக இருந்திருப்பார்களேயானால், இன்று ஐரோப்பாவின் நிலைமையே வேறுவிதமாக இருந்திருக்கும். ஹிட்லர் போட்ட திட்டங்களைச் சின்னபின்னமாக்கி யிருக்கலாம். அந்தத் திட்டங்களைப் பத்திரிகைகளில்கூடப் பிரசுரிக்க சேம்பர்லேன் அநுமதிக்கவில்லை. சமீபத்தில்தான் அந்தத் திட்டம் எப்படியோ பிரிட்டிஷ் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. துண்டு பிரசுரத்தில் குறிப்பிட்ட திட்டங்களைக் கண்டு தொடை நடுங்கிய சேம்பர்லேன், மூனிச்சில், ஹிட்லரை நேரில் எதிர்க்க எப்படித்துணிந்திருப்பார்? அது எதிர்க்க முடியாத ஒரு விஷயந்தான். ஆகவே, மூனிச்சில் சேம்பர்லேன் துரோகஞ்செய்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. ஹிட்லர் போட்டிருக்கும் திட்டத்தில் பிரிட்டனும், பிரான்சும் தப்பிவிடவில்லை. அவற்றையும் ஜெயித்து, ஜெர்மனியின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவர ஹிட்லர் கனவு காண்கிறார்.

பிரஞ்சு முதன் மந்திரி டலாடியர். ஸுடேடனை ஹிட்லர் விழுங்க இவரும் துணைபோனார். ஹிட்லர் பிரான்சை எதிர்க்கத் திட்டம் போட்டிருப்பது இவருக்குத் தெரியாது போலும்!

ஹிட்லர் கனவு!

ஹிட்லர் போட்ட திட்டப்படி, அவர் சில வெற்றிகள் பெற்றிருக்கி

(அடுத்த பக்கம் பார்க்க)

1948-ம் வருடத்துக்குள்...?

(முன் பக்கத் தொடர்ச்சி)

ரூர் என்பது உண்மையே. 1938-ம் வருடம் ஆஸ்திரியாவை ஜெயிக்க எண்ணினார்; அதை ஜெயித்துவிட்டார். அதே வருடத்தில் ஜெக்கோவை ஜெயிக்க எண்ணினார். அதையும் ஜெயித்துவிட்டார். அத்துடன் மெமல் அவர் கை வசம் வந்துவிட்டது. 1939-ம் வருடத்தில் போலந்தையும் அதைச் சார்ந்த டான்ஜிக் பிரதேசத்தையும் கைப்பற்ற உறுதி கொண்டிருக்கிறார். போலந்துடன் ஹிட்லர் தகராறு ஆரம்பித்துவிட்டார். இரு தேசங்களின் எல்லைப்புறங்களிலும், ராணுவங்களும், யுத்த தளவாடங்களும் ஏராளமாகக் குவிந்திருக்கின்றன. எந்த நிமிஷத்தில் ஹிட்லர், போலந்துமீது பாய்வாரோ சொல்ல முடியாது. போலந்தை ஜெயித்தபின், 1940ம் வருடம் யுகோஸ்லாவியாமீது பாய ஹிட்லர் எண்ணியிருக்கிறார். அதற்குள் முஸோலினி அல்பேனியாமீது பாய்ந்து அதை விழுங்கிவிட்டார். யுகோஸ்லாவியாமீது அவருக்குக் கண்ணுண்டு. என்றாலும், யுகோஸ்லாவியாவின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதாக முஸோலினி வாக்குறுதி கொடுத்திருக்கிறார். ஹிட்லர் போட்டிருக்கும் திட்டப்படி, அவர் யுகோஸ்லாவியாமீது படையெடுத்தால், முஸோலினி யுகோஸ்லாவியாவுக்கு உதவிக்குச் செல்லுவாரா? சந்தேகந்தான். ஒன்றில் அவர் ஹிட்லரை எதிர்க்கவேண்டும்; இன்றேல், யுகோஸ்லாவியாவை அதின் தலைவிதிப்படி விட்டுவிட வேண்டும். ரோம்-பெர்லின் அச்சு முறிவதும், முறியாததும் யுகோஸ்லாவியாவின் எதிர்கால நிலைமையையே பொறுத்திருக்கிறது. முஸொலினி எக்கேடு கெட்டாலும் பாதகமில்லை; ஹிட்லர் அவர் திட்டப்படி காரியத்தை நடத்திக்கொண்டுதான் போவார். யுகோஸ்லாவியாவைப் பிடித்தபின், 1940ம் வருடம் ருமேனியாவையும் பல்கேரியாவையும்பிடிக்க அவர்யோசனை போட்டிருக்கிறார்; அதே வருடத்தில் டென்மார்க், பெல்ஜியம், ஹாலந்து, ஸ்விட்சர்லந்து முதலிய சிறு தேசங்களின் தலைமீதும் கைவைக்க உத்தேசித்திருக்கிறார். 1941ம் வருடம் பிரான்ஸ்மீது படையெடுக்க வேண்டுமென்பது ஹிட்லர் எண்ணம். பிரான்சை எதிர்த்துப் பணியவைத்தபின், உடனே சோவியத் ரஷியாமீது படையெடுத்துச் சென்று, யுக்ரெய்ன் பிரதேசத்தின் பெரும்பாகத்தை ஜெயித்துவிட உறுதி கொண்டிருக்கிறார். பிரான்சை ஜெயித்து விட்டால், பிரிட்டனை மடக்குவது வெகு சுலபம். அப்படியே பிரிட்டனையும் மடக்க அவர் எண்ணியிருக்கிறார். 1938ம் வருடத்திலிருந்து 1948ம் வருடத்துக்குள், ஐரோப்பா முழுவதையும், ஆசியா தேசத்தின் ஒரு பகுதியையும் ஜெயித்துவிட ஹிட்லர் எண்ணியிருக்கிறார். இந்த தேசங்களெல்லாம் வெறும் அம்மாமி அப்பளங்கள், அவற்றை நினைத்த மாத்திரத்தில் எடுத்து விழுங்கிவிடலாமென ஹிட்லர் எண்ணியிருக்கிறார் போலும்!

இதாலிக்கும் பங்கு!

1948-ம் வருடத்தில் ஐரோப்பாவின் பெரும் பாகத்தில் "ஸ்வாஸ்திக்" கொடி பறக்குமென ஹிட்லர் கனவு காண்கிறார். அவருடன் இதாலியையும் சேர்த்துக்கொண்டார். இதாலிக்குப் பெரிய பிரதேசங்கள் கிடையாது; ஜெர்மனியுடன் சேர்ந்த ஒரு சிறு பங்காளியாகவே இதாலி இருக்கும். அதாவது, ஹிட்லர் தூர எறியும் எலும்புத் துண்டுகளைப் பொறுக்கி எடுத்துக்கொள்ளும் நாய்போல அவர் முஸோலினியைக் கருதி வருகிறார். போர்ச்சுகல், ஸ்பெய்னில் நல்ல செழிப்பான பிரதேசமாகிய வட ஸ்பெய்ன் முதலியவைகளை ஹிட்லர்எடுத்துக்கொண்டு, மீதியான பிரதேசங்களையும், தெற்கு பிரான்சையும் இதாலிக்குக் கொடுத்துவிடத் திட்டம் போட்டிருக்கிறார். ஜிப்ரால்டரின் திறவுகோல் ஜெர்மனியிடமே இருக்கும். பேலரிக் தீவுகளும், அல்பேனியா, கிரீஸ், துருக்கியில் ஒரு பகுதி, மத்தியதரக் கடலிலுள்ள சில தீவுகள் இதாலிக்குக்கொடுக்கப்படும். ஆனால், கருங்கடல் ஆதிக்கம் ஹிட்லர் கையிலிருக்கவேண்டுமென்பது ஹிட்லர் கனவு! இந்தக் கனவு வெறும் பைத்தியக்காரன் கனவுபோல் தெரியலாம்! ஆனால், ஹிட்லர் உண்மையிலேயே இந்தக் கனவு காண்கிறார். அதற்காக யுத்த திட்டமும் போட்டு வைத்திருக்கிறார். அவர் காணும் பைத்தியக்காரக் கனவு பலிக்குமா, பலிக்காதாவென்பதை இனிமேல்தான் பார்க்கவேண்டும். ஹிட்லரின் வெறி பிடித்த போக்கைக் கண்டு ஐரோப்பிய நாடுகளெல்லாம் விழித்துக்கொண்டன. எல்லா தேசங்களும் படைகளையும், யுத்த தளவாடங்களையும் சேகரித்து வருகின்றன. முடிவு என்னவாகுமோ தெரியவில்லை.

தமிழர் புது வருடமன்று வெளியாகிவிட்டது! எது?

ஈஸ்ட் இந்தியா பிலிம் கம்பெனியார் தயாரித்த புகழ்பெற்ற படம்

செமேரியா டாக்கி டிஸ்ட்ரிபூட்டர்ஸ்,
20, வேப்பேரி ஹைரோட், பி. டி. மதராஸ்.



ஈகில் மார்க் பீடியை
உபயோகியுங்கள்
பாக்கிட் 1க்கு காலணா

சங்கர் பீடி பாக்டரி,
55, மண்ணடி, மதராஸ்.

ஸ்தாபிதம் 1914 டெலிபோன் நெம்பர் 2224

இரும்புபெட்டி


அரிசி அல்லர்

புராதீன இரும்புபெட்டி தொழிற்சாலை உற்பத்தியாளரும், நடராஜன் இன்ஜினீரிங் ஒர்க்ஸ் சொந்தக்காரருமான

பி. நடேசமுதலியார்

உயர்தர இரும்பு பெட்டிகள், பீரோக்கள், அரிசி அல்லர்கள், மாவு மில்கள், சீயக்காய் மில்கள், இதற்கு வேண்டிய தனி சாமான்கள், இதர மிஷனெரி சாமான்களும் தயாரித்து சப்ளை செய்பவர்.

59, பிராட்வே, மதராஸ்.

மாவு மில்

சீயக்காய் மில்

கிளிப்பேச்சு

எல்லாம் பரம ரகசியம்!

மீண்டும் சனியன் சங்கிலி!

சாஹேபுக்கு அண்ணாத்தைகள்

வாலை மடக்குங்கள் சுண்டெலிகளே!

- பெருங்காயத் தலைவர் -

பட்டினி கிடப்பது யார்?

கிளியே, இவ்வாரம் என்ன விசேஷங்கள்? காந்திஜி எங்கே இருக்கிறார்?

டில்லியில், காந்திஜி, வைசிராயை இரண்டு மூன்று முறை சந்தித்துப் பேசினார். அவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்பது ரகசியமாகவே இருக்கிறது. இன்ன விஷயமாகத்தான் பேசிக்கொண்டார்களென்றுகூட ஜோசியம் கூற முடியவில்லை. அவ்வளவு பரம ரகசியமாக இருக்கிறது. காந்திஜி-வைசிராய் பேச்சின் பயனாகத் திடீரெனப் பெரிய சம்பவங்களோ, அறிக்கைகளோ வெளிவருமென்று கூட எதிர்பார்த்தேன். அந்தச் சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை; அறிக்கைகள்கூட வெளிவரவுமில்லை. காந்திஜி டில்லியிலிருந்து ராஜகோட்டுக்குப் புறப்பட்டுப் போய்விட்டார். இனிமேல் அவ்வித அறிக்கையையோ, சம்பவங்களையோ எதிர்பார்ப்பதற்கில்லை. காந்திஜிக்குமுன், சர்தார் பட்டேல் ராஜகோட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார். காந்திஜி வந்ததும், ராஜகோட் தகராறு தீர்ந்து, அங்கு சமரசமான முடிவு ஏற்படுமென்று நினைத்தேன். அதற்கு வழியில்லாது போய்விட்டது. ராஜகோட் மன்னர் மீண்டும் குதர்க்கஞ்செய்யப் புறப்பட்டிருக்கிறார். வீரவாலா போன்ற சனியன்கள் ராஜகோட் மன்னருடன் இருக்கும்போது, ராஜகோட்டைப் பிடித்த பீடை எப்படி நீங்கும்? ராஜகோட் தகராறு சனியன் சங்கிலிபோல் நீடித்துக்கொண்டு போகிறது. இந்தத் தகராறு ஏற்படாமல் மகாத்மா தடுத்திருக்கலாம். என்றாலும், காந்திஜி பெருந்தன்மையான நோக்கத்துடன், ராஜகோட் மன்னரைக் கலந்து ஆலோசித்தார். இதுதான் வினையாகவந்து முடிந்தது. பெடரல் கோர்ட் பிரதம நீதிபதி சர். மாரிஸ் க்வயர் செய்த தீர்ப்புப்படி சீர்திருத்தக் கமிட்டிக்குச் சர்தார் பட்டேல் 7 பேர்களை நியமிக்க அதிகாரம் உண்டு. ராஜகோட் மன்னர், உத்தியோகஸ்தர்களில் 3 பேர்களை நியமிக்கலாம். கமிட்டியிலுள்ள 10 பேர்களில் ஒருவரைத் தலைவராக நியமிக்க மன்னருக்கு அதிகாரமுண்டு. இதுதான் ஆதியில் சர்தாரும், மன்னரும் செய்துகொண்ட ஒப்பந்தம்; இதையே பிரதம நீதிபதி ஊர்ஜிதஞ் செய்தார். நீதிபதி தீர்ப்பை மன்னர் ஏற்றுக்கொள்ளுகிறார். ஆனால், மைனாரிட்டிகளுக்கும் கமிட்டியில் பிரதிநிதித்வம் கொடுக்கவேண்டும், அதற்காக மேலதிகமாக நால்வரை நியமிக்க வேண்டுமென ராஜகோட் மன்னர் கூறுகிறார். கமிட்டியிலுள்ள அங்கத்தினர்கள் தொகையை குறைக்கவோ, கூட்டவோ பிரதமநீதிபதியின் தீர்ப்புக் கட்டுப்படுத்தவில்லை. ஆகவே, கமிட்டியின் அங்கத்தினர்களை அதிகரித்துக்கொள்ள மகாத்மாவுக்கு ஆட்சேபனை இல்லை. சர்தார் பட்டேலுக்கு 7 பேர்களை நியமிக்கும் அதிகாரமிருக்கிறது அவருக்கு 8 பேர்களை நியமிக்க அதிகாரம் கொடுக்கும்படி காந்திஜி கேட்கிறார். மேலதிகமாக 4 பேர்களை நியமிக்க வேண்டுமெனக் கூறும் தாகூர் சாஹேப் சர்தாருக்கு ஒருவரை அதிமாக நியமிக்கும் அதிகாரத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார். அதற்கு அவர் கூறும் போலிக் காரணம் சிரிப்பாயிருக்கிறது. கமிட்டியில் மெஜாரிட்டி இருக்க வேண்டுமென்பது அவசியமில்லையாம்! எல்லோருக்கும் கமிட்டியில் சரியான பிரதிநிதித்வம் இருக்கவேண்டியதுதான் அவசியமாம்!! ஆனால், இப்படிக் கூறும் தாகூர்சாஹேப் ஏன் தனக்கு மெஜாரிட்டி தேடுகிறார்? சர்தார் பட்டேல் நியமிக்கும் அங்கத்தினர் 7 பேர், தாகூர் சாஹேப் நியமிக்கும் அதிகாரிகள் 3 பேர்; மேலாதிகமாக மைனாரிட்டிகள் பிரதிநிதிகள் 4பேர். கமிட்டித் தலைவர் ஒருவர். இது மெஜாரிட்டி தேடும் தந்திரமல்லவா? தாகூர் சாஹேப் கோரிக்கையை காந்திஜி ஏற்றுக் கொள்ளுகிறார்; ஆனால், பட்டேல் நியமிக்கும் 7 பேர்களுக்குப் பதிலாக் 8 பேர்களை நியமிக்கவேண்டுமென்கிறார். தாகூர் சாஹேப் மறுக்கிறார். இதுதான் புதிதாக எழுந்திருக்கும் தகராறு. காந்திஜி இதைச் சமரசமாக முடிக்க எவ்வளவோ முயற்சித்து வருகிறார். முஸ்லிம்களும், இதர சிறுபான்மையினரும் காந்திஜியைக் கண்டு பேசிவருகிறார்கள். காந்திஜி ரெஸிடெண்ட் ஜிப்ஸனையும் இரண்டொரு முறை கண்டு பேசினார். இந்தத் தகராறு சீக்கிரத்தில் ஒரு முடிவுக்கு வருமென்று நினைக்கிறேன். இன்றேல், மீண்டும் ராஜகோட்டில் பெரிய நெருக்கடி ஏற்படலாம். அப்படி ஒரு நெருக்கடி ஏற்படுமேயாயின், ராஜகோட் மன்னர் பட்டத்தை விட்டு ஓடவேண்டி வந்தாலும் வரலாம்.

ஆம்; அங்கு நெருக்கடி அதிகரித்தே தீரும்; நேரடியான போராட்டத்தை ஆரம்பித்தால்தான் மன்னருக்குப் புத்திவரும்.

மன்னருக்குச் சுய புத்தி இல்லை; அவர் சொற புத்தி கேட்டு நடக்கிறாரென்றே தெரிகிறது. சகுனி மாமா, வீரவாலா மன்னரை அவர் இஷ்டம்போல் ஆட்டிவைத்துக்கொண்டிருக்கிறார். மகாத்மாவுக்கோ, அல்லது, சர்தார் பட்டேலுக்கோ நேரடியான போராட்டத்தை ஆரம்பிக்கத் தெரியாமலல்ல; அவர்கள் சமரசமாக ஒரு முடிவுக்கு வர நினைக்கிறார்கள். மன்னர் இனிமேலும் பிடிவாதஞ் செய்வாரேயானால், அங்கு போராட்டம் மும்முரமாக ஆரம்பித்தே தீரும். ஒரு போராட்டம் வந்தால் காந்திஜி வெற்றி பெற்றே தீருவார். அதற்குச் சந்தேகமே வேண்டாம்.

அதைப்பற்றி யாரும் சந்தேகிக்க முடியாது. ராஜகோட் மன்னருக்கு நல்ல புத்தி வருமென்று நினைக்கிறேன். காந்திஜி எப்படி இருக்கிறார்?

காந்திஜி நல்ல சுகமே இருக்கிறார். ராஜகோட் தகாராறை சமரசமாகத் தீர்த்து வைப்பதிலேயே அவருடைய முழுக்கவனத்தையும் செலுத்தி வருகிறார். அவருடைய தேக நிலைமை சுமாராகவே இருக்கிறது. ராஜகோட் தகராறு சீக்கிரத்தில் தீர்ந்து போகுமேயாயின், மகாத்மா கல்கத்தாவில் கூடும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்துக்குப் போவார். ராஷ்ட்ரபதி சுபாஷ்பாபு குணமடைந்து வருகிறார். ஆனால் அவர் பலவீனமாகஇருக்கிறார். என்றாலும், காங்கிரஸ் வேலைகளைக் கவனித்து வருகிறார். காரியக் கமிட்டி நியமன விஷயத்தில் அவர் காந்திஜியைக் கலந்து ஆலோசித்து வருகிறார். காரியக் கமிட்டிக் கூட்டத்தைக்கல்கத்தாவில்இம்மாதம் 27ந் தேதிகூட்டவும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கூட்டத்தை இம்மாதம் 28, 29ந் தேதிகளில் நடத்தவும் அவர் தீர்மானித்திருக்கிறார். அதற்கான ஏற்பாடுகள் கல்கத்தாவில் தீவிரமாகநடந்துவருகின்றன. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடக்கும் காலம் சென்னை மாகாணத்துக்கு வசதியாக இல்லை. ஏனெனில், இம்மாதம் 24ந் தேதி சென்னை அசெம்பிளி கூடுகிறது. முக்கியமான பல பிரச்னைகளை முதன் மந்திரி ஆச்சாரியாரும், மற்றவர்களும் கவனிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, முதன் மந்திரி ஆச்சாரியார், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தை 24ந் தேதிக்கு முன்னே, அல்லது, மேமாதத்திலோ நடத்தும்படி கேட்டிருந்தார். அதற்கு சுபாஷ் பாபு ஒப்புக்கொள்ளவில்லை. 24ந் தேதிக்குமுன் கமிட்

(அடுத்த பக்கம் பார்க்க)

வெள்ளை, மேக வெள்ளை சம்பந்தப்பட்ட வியாதிகளிலிருந்து ஒரு விடுதலை

ஜண்டு

கோனே மிக்ஸ்சர்

வெள்ளை, மேக வெள்ளை, கொருக்கு, மற்ற எல்லாவித சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு கைதேர்ந்த மருந்து. அநேகர் குணமடைந்து, நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்து இருக்கிறார்கள்.

விலை 4 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 1-12-0

எல்லா ஜண்டு பார்மஸி ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்

மற்ற எல்லாவித மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்:

மற்ற வியாபார நிபந்தனைகளுக்கும், கீழ்க்கண்ட சோல் ஏஜண்டுகளுக்குஎழுதவும்

Zandu Pharmacy, Ltd.

த்ராமோதர் அண்டு கம்பெனி, 78, சைனா பஜார் ரோடு, மதராஸ்.

டிக் கூட்டத்தை நடத்த சுபாஷ் பாபு தேச நிலைமை இடங்கொடுக்காது. மே மாதத்துக்குக் கூட்டத்தை ஒத்தி போட்டால், ரஷ்டிரபதி வேணுமென்றே காலங்கடத்திக் கொண்டு போகிறார் என்ற புகார் ஏற்படும்; ஆனால், காந்திஜிக்குச் சம்மதமானால், கூட்டத்தை ஒத்திபோடத் தயார் என்று சுபாஷ் பாபு தெரிவித்திருக்கிறார். ஆதலால், ஆச்சாரியார் மகாத்மாவின் சம்மதத்தைக் கேட்டுத் தந்தியடித்திருக்கிறார். காந்திஜியின் அபிப்பிராயமென்னவென்பது தெரியவில்லை. சுபாஷ் பாபு ஏற்கனவே குறிப்பிட்டிருக்கும் தேதிகளில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டமும், காரியக் கமிட்டி கூட்டமும் நடைபெறுமோ என்னமோ நிச்சயமாகச் சொல்ல முடியாது. மேலும், பீகாரில், பிருந்தாவனத்தில் நடைபெறவிருக்கிற காந்தி சேவா சங்க மகா நாட்டைக் கூட மே மாதம் 2-ந் தேதிக்கு ஒத்தி வைத்திருக்கிறார்கள். ராஜகோட் தகராறு தீர்ந்ததும் காந்திஜி, பிருந்தாவனத்துக்குச் செல்லுவார். அந்த மகா நாட்டுக்குப் பின் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தை நடத்தினால் நலமாயிருக்கும்; எல்லோருக்கும் வசதியாக யிருக்கும். அ. இ. கா. கமிட்டிக் கூட்டத்தை இன்னம் சில வாரங்களுக்கு ஒத்திபோடுவதால் குடி முழுகியபோகாது; ஆதலால் ரஷ்டிரபதிமீது யாரும் குறை சொல்லுவார்களென்று நான் நினைக்கவில்லை. என்றாலும், ராஷ்டிரபதி விரும்பப் எப்படி இருக்குமோ சொல்ல முடியாது.

அது போகட்டும்; சமஸ்தானங்களின் நிலைமை என்ன?

ஹைதராபாத்தில் சட்ட மறுப்பை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். ஆகவே, சர்க்கார் அங்குள்ள சுமார் 200 ராஜீயக் கைதிகளை விடுதலை செய்திருக்கின்றனர். ஆனால், ஆரியசமாஜிகள் சட்டமறுப்பைத் தொடர்ந்து நடத்தியே வருகிறார்கள். சமீபத்தில் சுமார் 27 ஆரிய சமாஜிகளை, சமஸ்தானப் போலீசார் கைது செய்து, துலாஜாபூர் என்னுமிடத்துக்குக் கொண்டுபோனார்கள். சுமார் 200 முஸ்லிம்கள் கத்தி, கட்டி, வாள், தடிகளைத் தாங்கி கைதியான அந்த 27 ஆரிய சமாஜிகளையும் தாக்கினர்; சுமார் 13 பேர்களுக்குப் படுகாயம். அவர்களை உடனே ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்கு அனுப்பிவைத்தார்கள். கைதியானவர்களைத் தாக்கியது பெரிய குற்றம்; போலீசார் அதற்கு இடங் கொடுத்தது இன்னமும் பெரிய குற்றம். இதனால், ஹைதராபாத்தில் வகுப்புத் துவேஷம் அதிகரிக்குமே யொழிய, ஒருபோதும் குறையாது. இந்த வகுப்புத் துவேஷத்தை மூட்டிவிட்டவர்கள் நிஜாம் சர்க்காரே. அவர்களே அதின் பலாபலன்களை அனுபவிக்கப் போகிறார்கள். பொறுப்பாட்சிக்காக ஆரம்பித்த போராட்டத்தை வகுப்புப் போராட்டமாகத் திருப்பிய பாவம் அவர்களையே சாரும். ஆகவே, வினை விதைத்த அவர்கள் அந்த வினையை அறுத்தே தீருவார்கள். ஹைதராபாத்தில் ஹிந்துக்களே பெரும்பான்மையோர் என்பதை நிஜாம் சர்க்கார் மறந்துவிடக்கூடாது. இதர சமஸ்தானங்களில் நடக்கும் போராட்டங்களைக் கவனித்தாலது. நிஜாம் சர்க்கார் ஒருபடி இறங்கி வருவது உசிதம். மக்களுக்குப் பொறுப்பாட்சி கொடுத்துவிட்டால், வகுப்புத் துவேஷம் தானாகவே அடிபட்டுப் போகும். தல்சார் சமஸ்தானத்தில்தான் அக்கிரமம் அதிகம். அங்கு சுமார் 25000 ஜனங்கள் சமஸ்தானத்திலிருந்தே வெளியேறியது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அவர்கள் இன்னமும் திரும்பிவரவில்லை; அவர்கள் கஷ்டம் சொல்லி முடியாது. என்றாலும், தல்சார் மன்னர் மனம் கல்லாகவே இருக்கிறது. அவர் ஒருவித சமரசத்துக்கு வந்து, மக்களுக்குச் சீர்திருத்தம் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்தார். அந்த வாக்குறுதியைக்கூட இப்பொழுது மீறிவிட்டார். ராஜகோட் மன்னர் தாகூர் சாஹேபுக்கு அண்ணதைத்தான் தால்சார் சமஸ்தான மன்னரும்! அவர் மட்டுமல்ல, எல்லா சமஸ்தான மன்னர்களும், அவாளுக்கு இவாள்தான்! பிரஜைகளின் ரத்தத்தைக் குடித்து, சகலவிதமான சுகபோகத்திலும் ஊறிப்போய் கிடக்கும் மன்னர்களுக்கு, வாக்குறுதியோ, நாணயமோ என்கிருந்து வரும்? மன்னர்களுக்குச் சகுனிகள்போல் திவான்கள் கிடைத்திருக்கிறார்கள்! அவர்கள் மன்னருக்குமேல் 30 அடி பாய்கிறார்கள். திருவாங்கூர் திவான் ஸர் சி. பி. அதற்கு நல்ல உதாரணம். அங்கு பொறுப்பாட்சிப் போராட்டத்தை நிறுத்திவைத்திருந்தும், திவானின் இறுமாப்புப் போகவில்லை. இன்னமும் திருவாங்கூர் காங்கிரஸை நசுக்கவே அவர் சதிசெய்து கொண்டிருக்கிறார். சர். சி. பி. குட்டிக் கரணம் போட்டாலும், ஆகாயத்தில் துள்ளிப் பாய்ந்தாலும் சமஸ்தான மக்களின் சுதந்திரக் கிளர்ச்சியை அடக்க முடியாதென்பது திண்ணம். சி. பி. யும், சி. பி. யைப் போன்ற திவான்களும், சுயபுத்தியற்ற பொம்மை மன்னர்களும் இதை நன்றாக அறிந்து கொள்ளுவார்களாக.

மெய்தான்; இந்த மன்னர்களுக்கும், தீவான்களுக்கும் என்றுதான் நல்லபுத்தி வருமோ தெரியவில்லை. சமஸ்தானப் பொறுப்பாட்சிப் போராட்டங்கள் மும்முரமாக நடந்து, மக்கள் சுதந்திர மடைந்தாலொழிய, வெறும் கோபுரப் பொம்மைகளாக இருக்கும் இவர்கள் கண் திறக்கப் போவதில்லை. மன்னர்களின் மயக்கம் தெளியவேண்டுமானல், போராட்டம் மும்முரமாக நடக்கவேண்டும்.

ஆம்; அவ்வித போராட்டத்துக்கு மக்கள் தயாராகிக் கொண்டுதான் வருகிறார்கள். அவ்வித போராட்டம் சீக்கிரத்தில் வருமென்றே நினைக்கிறேன். சகல சமஸ்தான மன்னர்களும் இறங்கிவர வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. ராமதுர்க்கா சமஸ்தான மன்னர் பிரஜைகளுக்கு விட்டுக் கொடுத்தும், அங்கு திடீரெனப் பெரிய கலவரம் ஏற்பட்டது. ஆத்திரமடைந்த பிரஜைகள் ஆஸ்பத்திரி முதலியவைகளுக்குத் தீ வைத்தனர்; போலீசாரைத் தாக்கினர். இதனால் போலீசார் ஜனங்களைச் சுடவேண்டியதாயிற்று. 5 பேர் மாண்டனர்; பலருக்குக் காயம். இந்தக் கலவரத்துக்குக் காரணம் யார்? அது தீவிரவாதிகளென்றே சொல்லலாம். வரியைக் குறைக்கும்படி அங்கு கிளர்ச்சி நடந்தது. வரிக் குறைப்புக் கமிட்டி சிபார்சுப்படி மன்னர் வரியைக் குறைத்தார். என்றாலும், ஜனங்கள் அதிக உரிமைக்கு வற்புறுத்தினார்கள். இது தீவிரவாதிகளின் தூண்டுதலின் பேரில் நடந்ததாகத் தெரிகிறது. ஜனங்கள் ஆவேசங்கொண்டு கலகஞ் செய்தனர். கலகஞ் செய்தது கூடாது. ஆனால், நெடுங்காலமாக அடக்கிவைக்கப்பட்ட மக்கள் மீறினால் என்ன கதியாகும்? அவர்கள் கட்டுக்கடங்காமல் போய்விடுவார்களென்பதில் சந்தேகமில்லை. இதேபோல் ஒவ்வொரு சமஸ்தானங்களிலும் மக்கள் கட்டுக்கு மீறிப் போய்விட்டால் மன்னர்கள் கதி என்னவாகும்? இதைச் சிந்தித்துப் பார்த்து, மன்னர்கள் இனிமேலாவது சமஸ்தான பிரஜைகளின் கோரிக்கைகளுக்கு இசைந்து வருவது நல்லது. ஆபத்து வரும்வரையில் காத்திருப்பது புத்திசாலித்தனமல்லவென்றே நினைக்கிறேன்.

உண்மைதான்; ராஜகோட் முடிவு இதர மன்னர்களின் கண்களைத் திறக்கும் கருவியாக இருக்கப் போவது நிச்சயம். வேறு விசேஷங்கள் உண்டா?

தென்னாட்டைப் பொறுத்தவரையில் பல விஷயங்கள் உண்டு. சொற்பகாலமாகத் தூங்கிக்கொண்டிருந்த மந்திரிகளும், அசெம்பிளி மெம்பர்களும், தமிழ்நாட்டுத் தலைவர்களும், இப்பொழுதுதான் தூக்கம் தெளிந்து எழுந்தார்கள். ஆங்காங்கு சென்று பிரசாரஞ் செய்து வருகிறார்கள். இந்தப் பிரசாரத்தை இவர்கள் ஆதியிலேயே தீவிரமாக நடத்தியிருந்தால், காங்கிரசில் மலிந்து வந்த ஊழல்கள் அதிகரித்திருக்காது; காங்கிரஸ் எதிரிகளும் தலைகாட்டியிருக்கமாட்டார்கள். சு.ம. காரர் விஷமமும், காலித்தனமும் இருந்த இடம் தெரியாமல் போயிருக்கும். காங்கிரஸ் தலைவர்கள் இப்பொழுதாவது விழிப்படைந்தார்களே அதுவே போதும்; இனிமேல் தமிழ்நாட்டுக்கு நல்லகாலமென்றே நினைக்கிறேன். தமிழ்நாட்டுத் தலைவர்களுடன் தீவிர வாதத் தோழர்களும், சு. ம. காரர் காலித்தனத்தையும், விஷமத்தையும் மடக்கக் கங்கணங் கட்டிப் புறப்பட்டிருப்பதைக் கண்டு சந்தோ

(அடுத்த பக்கம் பார்க்க)

இனம் ! இனம் !! இனம் !!!

காம சாஸ்திரம்

தேக சுகத்தையும், தீர்க்காயுளையும் அடைவதற்கு ஓர் சிறந்த வழி காட்டி இன்றே வாசியுங்கள். கேட்பவர்களுக்கு இனமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும். உங்களுடைய விலாஸத்தை உடனே தெரிவியுங்கள்.

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

மாதம் 50 ரூபாய் சம்பாதிக்கலாம் ஏஜண்டுகள் தேவை
நெ. 1 ராமபாணம் டாம்-டாம் டானிக், ரிஜிஸ்டர் நெ. 2836
நெ. 2 ரீஜே விஜிடபிள் டானிக் சிரப், ரிஜிஸ்டர் நெ. 3379
நெ. 3 பேட்டிக் வாட்டர் சிரப்,
நெ. 4 அய்ரோல் ஸ்வீட் கேஸ்டர் சிரப்,
நெ. 5 காஸ்டர் சாக்லேட்,
சாம்பில் வேண்டுவோர் 2 அணு ஸ்டாம்பு அனுப்பவும்
விவரங்களுக்கு:— C. F. and Sons, 503, மின்ட் ஸ்டிரீட், மதராஸ்.

ஒரே நாளில் அடக்கமுடியாத தாதுபுஷ்டியில் போட்டி போடலாம்.

மதயானைக் குளிகை

இதில் தங்கம், யானைக்கொம்பு பஸ்பம் முதலிய உயர்ந்த மருந்துகள் சேர்த்து தயாரித்திருக்கிறது. அறவே இழந்த தாது பலத்தை, ஒரு மணி நேரத்தில் திரும்ப உண்டாக்கி மாதர்களை மயக்கிவிடுகிறது. நாடி, நரம்புகளை முறுக்கேறி இந்திரியம் இறுகிவிடுகிறது. மதயானையைப் போல் தாது முறைத்து வலுத்து, நினைக்க நினைக்க இன்பம் உண்டாக்கி வருவதை கண்டால், கிழவனும் வாலிபனைப்போல சுகித்து ஆனந்திக்கலாம். 50 குளிகை ரூ. 5. (சாம்பிள் 25 குளிகை ரூ. 3.)

கே. எஸ். பதி வைத்தியசாலை, பழனி. S. I. Ry.

கிளிப்பேச்சு

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஷிக்கிறேன். அவர்கள் வெறும் பிரசாரத்தோடு நின்றுவிடக்கூடாது. சு. ம. சுண்டெலிசளை மீண்டும் தலை காட்டவிடாமல், அவர்கள் வலைக்குள் மீண்டும்போய் ஒளிந்துகொள்ளும்படி துரத்தியடிக்க வேண்டும். அப்பொழுதுதான் தமிழ் மக்கள் திருப்தியடைவார்கள் தமிழ் நாட்டுத் தலைவர்கள் அவர்கள் கடமையைச் செவ்வனே நிறைவேற்றி வைப்பார்களென்று நினைக்கிறேன்.

மெய்தான்; தமிழ்நாடு நிம்மதியாக இருக்கவேண்டுமானால், இந்தச் சு. ம. சுண்டெலிகளின் உடத்ரவம் நீங்கவேண்டும்.

அந்தச் சுண்டெலிகள் பதுங்கும் காலம் வந்துவிட்டது. சு. ம. காரரை எல்லாத் தமிழர்களும் வெறுக்கின்றனர். தொழிலாளிகள்கூட அவர்களை மடக்கக் கச்சைக் கட்டிவிட்டார்கள். சமீபத்தில் தேசீயக் கொடியை சு. ம. காரர் பல இடங்களில் அவமதித்தது தோழர்களின் உள்ளங்களைக் கொதிக்கச் செய்து விட்டது. சென்னைக் கார்ப்பொரேஷன் கட்டிடத்தில் பறந்து கொண்டிருக்கும் தேசீயக் கொடியை சில பாசுதேவ்களும், அவருடைய வால்களும் இறக்கியே தீருவதென மீசையை முறுகினார்கள். இது எரிகிற நெருப்பில் எண்ணெயை வார்த்ததுபோல், தோழர்களின் மனக் கொதிப்பை இன்னமும் அதிகரித்துவிட்டது. அவர்கள் குமுறிக்கொண்டிருக்கிறார்கள். தேசீயக் கொடியை இனிமேல் சு. ம. காரர் அவமதிப்பார்களேயானால், அல்லது, கார்ப்பொரேஷன் கொடியை இறக்குவார்களேயானால், சென்னையில் ஒரு பெரிய தேசீயக் கொடிப் போராட்டம் நடந்தே தீரும். தேசீயக் கொடி, இந்திய மக்கள் சுதந்திரத்தின் சின்னமா, அல்லது, சு. ம. காரர் கூறுவதுபோல் அது மோசடிக் கொடியா என்பதை தோழர்கள் சு. ம. காரருக்கு நிரூபித்துக் காட்டுவார்கள். சு. ம. சுண்டெலிகளே, இனிமேல் உங்கள் ஜம்பம் பலிக்காது; வாலை மடக்கிக் கொள்ளவேண்டியதுதான்!

ஆம்; தோழர்கள் காங்கிரஸை ஆதரிக்கவும், காங்கிரஸுக்காகவும், தேசத்துக்காகவும் தியாகஞ்செய்யவும் முனைந்துவிட்டால், அப்பறம் நமது வெற்றியைப்பற்றிச் சந்தேகமே வேண்டாம்.

ஆமாம்; வெற்றி நமக்கு நிச்சயம் கிடைத்தே தீரும். ஆனால், தோழர்களைச் சில தொழிலாளர் தலைவர்கள் தவறான வழியில் நடத்திக் கொண்டு போகிறார்கள். தலைவர்களெனக் கூறிக் கொள்ளும் அவர்கள் உண்மையான தலைவர்களல்ல; தோழர்களைக் கொண்டு, இவர்கள் பிழைக்கவும், பெரிய பதவிகள் பெறவும் வழி தேடிக்கொள்ளுகிறவர்கள். தோழர் தலைமீதுஏறி, தலைவரென்று பட்டம் சூட்டிக்கொள்ளுவோர். இந்த சுயநலமிகள் வலையில் சிக்கி மோசம் போகவேண்டாமெனத் தோழர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த புளியேப்பத் தலைவர்கள் எப்பொழுதும், நான் முந்தி, நீ முந்தியென ஓடி வருவார்கள்; ஆபத்து வந்தால் தோழர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டுப் பின்னால் ஓடுவார்கள். ஆபத்து காலத்தில் தோழர்களை எட்டியும் பார்க்கமாட்டார்கள். இப்பேர்ப்பட்ட தலைவர்களின் பேச்சைக் கேட்டுத் தோழர்கள் மோசம் போகக் கூடாது. இவர்கள் பேச்சைக் கேட்டே சுமார் 3000 சூளைமில் தோழர் இன்று நடுத் தெருவில் நின்று தவிக்கின்றனர். இவர்களும், இவர்கள் பெண்டு பிள்ளைகளும் இன்று ஜீவனத்துக்குக் கஷ்டப்பட நேர்ந்திருக்கிறது. இவர்கள் கஷ்டங்களைப் போக்கத் தொழிலாளர் தலைவர்கள் என்ன செய்தார்கள்; அல்லது, என்ன செய்துவருகிறார்கள்? பெரிய தியாகிகள், தோழருக்காக உயிரைக் கொடுத்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் முதலியார், செட்டியார், நாயுடுகள் எங்கே? அவர்கள் சுகமே வீடுகளில் சோபாக்களில் அமர்ந்திருக்கிறார்கள்! பட்டினி கிடப்பது யார்? தோழர் தலைவர்களா? இல்லவே இல்லை. ஏழைத் தோழர்களும், அவர்கள் பெண்டு பிள்ளைகளுந்தான் இன்று கஞ்சிக்குக் காற்றாய்ப் பறக்கிறார்கள். தோழர்கள் இந்த பெருங்காயத் தலைவர்களை நம்பி மோசம்போக வேண்டாமென மீண்டும் எச்சரிக்கிறேன். கஷ்டப்படும், ஏழைத் தோழர்களுக்கும், அவர்கள் மனைவி மக்களுக்கும் ஆதரவு அளிக்கவேண்டியது தமிழ் மக்கள் கடமை; தமிழர் அனைவரும் தோழர்களின் துயரங்களைப் போக்க முன்வருவார்களாக.

ஓர் சன்யாசியின் பரம ரகசியமுறை பந்தயமிட்டு பரீக்ஷிக்கலாம்

சர்வரோகமும் வேரற்று நிர்மூலமாகும் விபரமாக எழுதுங்கள்

ரவி–தங்க பஸ்பக் குளிகை

தண்ணீராய் ஓடும் இந்திரியமும் நொங்கைப்போல் உறைந்து கட்டும். மகா உன்னதமான குளிகை. லாகிரி வஸ்து கிடையாது. விலை உயர்ந்த சரக்குகளால் தயாரிக்கப்பட்டது. 100-குளிகை ரூ. 12.

சித்தர் ஆராக்ஷி-எம். கந்தசாமி பிள்ளை

இந்திய மகரிஷிகள் சித்த வைத்தியசாலை, பழனி. S. I.

வரப்போகும் புதிய பெட்ரோல் வரியைப் பற்றி உங்களுக்குக் கவலையே வேண்டாம்

சிக்கனமும் அருமையானதுமான
23 குதிரை வேகமுள்ள, இஞ்சினையுடைய "பிலிமத்",
காரை உங்கள் பணத்தைக் கொடுத்து வாங்குங்கள்

ஏனெனில் போக்குவரத்துக்கு வசதியான கார்
சொகுசுடையது அந்தக் காருககுச்
செலவாகும் பெட்ரோல் மிக சொற்பம்

சதர்ன் மோட்டார்ஸ்

(அடிசன் அண்டு கம்பெனி லிமிடெட்)

மதராஸ்-பிராஞ்சுகள்.



உங்கள் நோய்களுக்கு பரம ஔஷதம்

—: எது தெரியுமா? :—

ஜீவக புஷ்ப லேகியம்

இது அனேக மூலிகைகளினாலும்,
பழ ரசங்களினாலும்
தயார்செய்யப்பட்டது.

சாப்பிடுவதற்கு ருசியாக இருப்பதோடு, உங்கள் குடல் சம்பந்தமான சகல நோய்களையும் குணப்படுத்தி, உங்கள் மேனியைப் பொன் மேனியாக்கிவிடும்.

மலச்சிக்கல், மூல ரோகம், குடல் புண்கள், கிருமி உபத்திரவம், வயிற்று வலி, வாயுபொருமல், புளித்த ஏப்பம், நெஞ்சு அரிப்பு, கை கால் வலி, இடுப்பு வலி, பித்தம், தலை சுழற்றல், மந்த ஜுரம் முதலிய சகல நோய்களுக்கும் கைகண்ட மருந்து.

ஆண், பெண், குழந்தைகள் எல்லோரும்
எவ்வித பத்தியமுமின்றிச் சாப்பிடலாம்.

உபயோகிக்கும் முறை மருந்துடன் உங்களுக்குக் கிடைக்கும்.

இன்றே இந்த

ஜீவக புஷ்ப லேகியத்தை

உபயோகித்துப் பாருங்கள்.

1 ராத்தல் விலை ரூ. 8—0—0	¼ ராத்தல் விலை ரூ. 3—0—0
½ ,, ,, 5—0—0	2 அவுன்ஸ் விலை ரூ. 1—8—0

சோல் டிஸ்டிரிபூடர்ஸ்,

போஸ்கோ மெடிகல் ஸ்டோர்ஸ்,

நெ. 5, சவுரிமுத்து தெரு, மண்ணடி, ஜி. டி. மதராஸ்.

தமிழ் மணி

சென்னை—பிரமாதி௵ சித்திரை௴ 3௳ (16—4—1939)

பகற் கொள்ளையே!

இதுவரையில் சர்க்கார் ஏழைகளையே கொள்ளையடித்து வந்திருக்கிறார்கள். ஏழைகள் வருமானமோ சொற்பம்; அவர்கள் இரத்த வியர்வை சிந்தி, எலும்புந் தோலுமாக உருகி, குடிக்கக் கஞ்சியின்றி, உடுக்க உடையின்றி, வசிக்க வீடின்றி வாடியபோதிலும், சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய வரியை எப்படியும் கொட்டித் தொலைய வேண்டியிருக்கிறது. ஏழைகள் வரி செலுத்தப், பணக்காரரோ, வரி செலுத்தாமல் சுகம் அனுபவித்து வருகிறார்கள். இது அநியாயம்; மகா பாவம்! இந்தப் பாவத்தைப் போக்கவும், சர்க்கார் கொள்ளையை நிறுத்தவும் காங்கிரஸ் சர்க்கார் முயற்சித்து வருகின்றனர். ஏழைகளின் வரிப் பளுவைக் குறைக்கப, பணக்காரரும் வரி கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்காக விற்பனை வரி முதலிய சில வரிகளை விதிக்கச் சட்டங் கொண்டுவரப் போகிறார்கள். இதைத்தான், பணக்காரரும், வர்த்தகரும், காங்கிரஸ் எதிரிகளும் எதிர்த்து வருகின்றனர். ஆனால், இப்பொழுது, அவர்கள் காங்கிரஸ் சர்க்காரின் நோக்கத்தை தெரிந்து கொண்டார்கள். அவர்கள் எதிர்ப்பும் மட்டுப்பட்டு வருகிறது.

வரிச் சுமை

ஏழைகளைச் சர்க்கார் எப்படிக் கொள்ளை அடிக்கிறார்கள்; ஏழைகள் கொடுத்துவரும் அநியாய வரி என்ன வென்பதைக் கவனிப்போம். சென்னை மாகாணத்தில் 4½ கோடி மக்களிருக்கிறார்கள். இவர்களில் 100க்கு 60 பேர் விவசாயிகள். சர்க்கார் மொத்த வருமானம் 16 கோடி ரூபாய். இதில் ஏழை விவசாயிகள் கொடுக்கும் வருமானம் என்ன தெரியுமா? 9½ கோடி ரூபாய்! கலால் வருமானம் 4½ கோடி; ஸ்டாம்புக் கட்டணம் மூலம் 1½ கோடி; மீதி இனங்களிலிருந்து 50 லக்ஷந்தான். கலால் வருமானங் கூடப் பெரும்பாலும் ஏழைகளிடமிருந்தே கிடைக்கிறது. ஏனெனில் கள், சாராயம் குடிப்பவர்களில் பெரும்பாலோர் ஏழைகளே. இந்த ஏழைகளின் சராசரி வருமானம் 11¾ ரூபாய்தான்; அவர்கள் சர்க்காருக்கோ சராசரி 5 ரூபாய் வரி கட்டவேண்டியிருக்கிறது! பணக்காரர், வர்த்தகர் முதலியோர் சராசரி வருமானம் ரூ. 25. அவர்கள் சென்னை சர்க்காருக்குச் செலுத்தும் வரிஒன்றுமில்லை நகரங்களில் வசிக்கும் சுமார் 30 லக்ஷம் வர்த்தகரும், பணக்காரரும் 25 லக்ஷம் ரூபாய் வருமான வரியை இந்திய சர்க்காருக்குக் கொடுக்கிறார்கள்; அவ்வளவுதான். ஆகவே, சென்னை சர்க்காருக்குக் கிடைக்கும் வருமானம் 16 கோடியில், 14கோடி ரூபாய் ஏழைகளே கொடுக்கிறார்கள். பணக்காரர் கொடுக்கும் வருமானம் சுமார் 2 கோடிதான். இரத்தஞ் சிந்தப் பாடுபடும் ஏழைமக்கள் 14 கோடி ரூபாய் கொடுப்பதென்றால் அது கொடுமை! மகாக் கொடுமையென்றே சொல்லவேண்டும். பணக்காரரும், வர்த்தகரும் ஏழை மக்களின் வரிப்பளுவைக் குறைத்து, அவர்கள் விமோசனமடைய உதவிச் செய்யவேண்டும். அவர்கள் மனமுவந்து புது வரிகளைக்கொடுக்க முன்வந்தால், ஏழைகளின் வரிச் சுமை குறைந்துவிடு மென்பதில் சந்தேகமில்லை.

மற்றொரு கொள்ளை!

சர்க்கார் கொண்டுவரப்போகும் விற்பனை வரிச் சட்டம் இன்னமும் சட்டமாகவில்லை. அது ஒரு கமிட்டி விசாரணையிலிருந்து வருகிறது. சட்டமாகி அமுலுக்கு வர இன்னம் 5 அல்லது, 6 மாதங்களாகும். அதற்குள் பல வியாபாரிகள் பொதுஜனங்களைக் கொள்ளையடிக்க ஆரம்பித்து விட்டார்கள். பல சரக்குகளின் விலையைக் கூட்டிப் பகற்கொள்ளையடித்து வருகின்றனர். இந்தக் கொள்ளையைச் சர்க்கார் உடனே நிறுத்தவேண்டும். இன்றேல், சரக்குகளின் விலையை நிர்ணயித்துக் கூட்டுறவு வர்த்தகங்களை ஏற்படுத்த வேண்டும். சர்க்கார் இதில் தலையிடாதிருந்தால், வர்த்தகர் பொதுஜனங்களைக் கொள்ளையடித்து, ஏராளமான லாபம் சம்பாதித்து விடுவார்களென்பது நிச்சயம். அதனால், சர்க்கார் பொதுஜனங்களின் வெறுப்பைத் தேடிக்கொள்ளவேண்டி வரும். இப்பொழுதே பொது ஜனங்கள் முணுமுணுக்க ஆரம்பித்துவிட்டார்கள். பொது ஜனங்களின் முணுமுணுப்பும், எதிர்ப்பும் அதிகரிக்காமல் தடுக்கக் காங்கிரஸ் சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்களாக. பொதுஜன ஆதரவு இன்றேல், காங்கிரஸ் சர்க்கார் அரை விநாடியும் அதிகாரத்திலிருக்க முடியாதென்பதை முதன் மந்திரி ஆச்சாரியார் ஞாபகத்திலிறுத்திக்கொள்ளுவாராக.

திரிசங்கு நிலைமை!

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் கல்கத்தாவில் நடைபெறப் போகிறது. அந்தக் கூட்டத்துக்குக் காந்திஜி செல்லுவாரா வென்பது நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால், சில பத்திரிகைகளில் வெளிவரும் ஜோசியங்களைப் பார்த்தால். காந்திஜி அக் கூட்டத்துக்குப் போகமாட்டாரென்றே தெரிகிறது. காந்திஜி போகாவிட்டால், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ஒரு நெருக்கடி ஏற்பட்டே தீரும்.

ராஷ்ட்ரபதி போக்கு

திரிபுராவில் நிறைவேறிய பந்த் தீர்மான சம்பந்தமாக ராஷ்ட்ரபதி சுபாஷ் பாபு சமீபத்தில் வெளியிட்ட அறிக்கைகளே இந்த நெருக்கடிக்குக் காரணம். பந்த் தீர்மானம் சட்டப்படி செல்லாது; என்றாலும், காந்திஜியின் யோசனைப்படியே கட்டுப்பட்டு நடக்கப்போவதாகவும், அவருடைய யோசனைப்படியே காரியக் கமிட்டியை அமைக்கப் போவதாகவும் சுபாஷ் பாபு அவருடைய அறிக்கைளில் குறிப்பிட்டிருந்தார். மேலும் ராஷ்ட்ரபதி தேர்தலுக்குமுன் ஒரு புதுத் திட்டம் அமைத்து வேலை செய்யப்போவதாகவும் ஏற்கனவே கூறியிருந்தார். அவருடைய புதுத் திட்டம் என்னவென்பது தெரியவில்லை. அந்தத் திட்டம் என்னவென்று தெரிந்தாலொழிய, அவரை மெஜாரிட்டி காங்கிரஸ்காரர் ஆதரிக்கமாட்டார்களென்பது திண்ணம். காரியக் கமிட்டி அமைப்பிலும், காந்திஜி யோசனை சொல்ல மறுத்து விடுவார். ஆகவே, ராஷ்ட்ரபதியின் நிலைமை மீண்டும் நெருக்கடியில்தான் வந்து முடியலாம்.

திரிபுரா சங்கடம்!

காங்கிரஸ் காரியக் கமிட்டி அமைப்பில் காந்திஜி யோசனைகூற மறுத்துவிட்டால், சுபாஷ் பாபு அவருடைய இஷ்டம்போல் ஒரு காரியக் கமிட்டியை அமைக்கலாம். அந்தக் கமிட்டியை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஏற்றுக்கொள்ளுமாவென்பது சந்தேகமே. காந்தீயர்கள் அந்தக் கமிட்டியை எதிர்த்தே தீருவார்கள். அதி தீவிர வாதிகள் ராஷ்ட்ரபதியை எதிர்க்கமாட்டார்கள்; திரிபராவில் நடந்துகொண்டதுபோல் அவர்கள் நடு நிலைமை வகிக்கலாம். அப்படியானால் திரிபுராவில் என்ன நிலைமை எற்பட்டிருந்ததோ, அதே திரிசங்கு நிலைமையில் தான் ராஷ்ட்ரபதி நிற்க நேரிடும். இவ்வித நெருக்கடி ஏற்படாமல் தடுக்கக் காங்கிரஸ் தலைவர்கள் இப்பொழுதே முயற்சிக்கவேண்டும். இவ்வித நெருக்கடி ஏற்படக்கூடுமென அறிந்து, ராமானந்த சாட்டர்ஜி, ஒருவித சமரசமேற்படுத்தக் காந்திஜிக்கும், ஜவார்லால், சுபாஷ் பாபு முதலியோருக்கும் கடிதங்கள் எழுதியிருக்கிறார். சுபாஷ் பாபு அவருடைய பிடிவாதத்தைத் தளர்த்தி, துர்மந்திரிகளின் யோசனைகளைக் கேட்காமல் ஓரளவு விட்டுக்கொடுப்பாரேயாயின், இந்த நெருக்கடி ஏற்படாமல் தவிர்த்து விடலாம். ராஷ்ட்ரபதி இதற்கு இணங்குவாரா? பொறுத்துப் பார்ப்போம்.

வெறும் வீச்சு!

முஸோலினி, அல்பேனியா மீது படையெடுத்துச் சென்று அதை விழுங்கியது, பிரிட்டனுக்கும், பிரான்சுக்கும் ரொம்ப ரோஷத்தைக் கிளப்பிவிட்டது. இனி மேலும் சர்வாதிகாரிகள் சிறு தேசங்களை ஆக்ரமிப்பார்களேயானால், பிரிட்டனும், பிரான்சும் கண்டிப்பாக யுத்தத்துக்குப் புறப்பட்டே தீருமென்று, பிரிட்டிஷ் முதன் மந்திரியும், பிரஞ்சு முதன் மந்திரியும் கர்ஜிக்கிறார்கள். ருமேனியா, போலந்து, கிரீஸ், துருக்கி முதலிய சிறு நாடுகளுக்கு உத்திரவாதம் கொடுத்திருக்கிறார்கள். பிரிட்டனும், பிரான்சும் அவைகள் கொடுத்த வாக்குறுதிப்படி நடக்குமா? என்னமோ சந்தேகந்தான். பிரிட்டிஷ், பிரஞ்சு மந்திரிகள் வார்த்தையளவில் கர்ஜிக்கலாம்! ஆனால், செயலளவில் காட்டவேண்டியது வந்தால் அவர்கள் கர்ஜனையெல்லாம் எங்கேயோ பறந்துவிடும்;

யுத்தம் வருமா?

பிரிட்டனும், பிரான்சும் கர்ஜிக்கும் வேகத்தைப் பார்த்தால், அவை யுத்தத்துக்கு இப்பொழுதே புறப்பட்டுவிட்டனவோவென்று நினைக்கலாம். அப்படி நினைக்கவேண்டாம். இப்படி உரக்கக் கர்ஜித்தால், சர்வாதிகாரிகள் பயந்துபோவார்கள் என்பது பிரிட்டிஷ், பிரஞ்சு ராஜதந்திரிகளின் எண்ணம். ஆனால், சர்வாதிகாரிகள் இவர்கள் சலசலப்பைக் கண்டு அஞ்சப்போவதில்லை. பிரிட்டனும், பிரான்சும், இதர சிறு நாடுகளுக்காக யுத்தத்தில் ஒருபோதும் இறங்காது; இப்போது அவை யுத்தத்துக்குத் தயாராகவுமில்லை. ஒரு வேளை, பிரிட்டன், பிரஞ்சு உயிர் நாடியில் சர்வாதிகாரிகள் கை வைப்பார்களேயானால், அப்பொழுது பிரிட்டனும், பிரான்சும் யுத்தத்தில் இறங்கலாம். அதற்கு இன்னமும் இரண்டு, மூன்று வருடங்களாகும். அது வரையில் பிரிட்டனும், பிரான்சும் வெறும் கர்ஜனையுடனும், வாய் வீச்சுடனும் நின்றுகொள்ளும். அதற்கு மேல் ஒரு அங்குலங்கூட நகராது.

ஜப்பான் தடுமாற்றம்

சீனாவில் முன்னேறிச் செல்ல முடியாத ஜப்பானியர், சீனாவில் அவர்கள ஜெயித்த பிரதேசங்களில் பொம்மை சர்க்கார்களை ஏற்படுத்தி வருகின்றனர். அங்கு ஏராளமான ஜப்பான் ராணுவங்களையும் வைத்திருக்கிறார்கள். இதனால் ஜப்பானுக்கு அதிகச் செலவு; ஜப்பானின் பொருளாதார நிலைமையோ சீர் கெட்டு வருகிறது. இந்த நிலைமையில் ஜப்பான், சீன-யுத்தத்தை நீடித்து நடத்துமாவென்பது சந்தேகந்தான். இச்சந்தர்ப்பத்தில் ஐரோப்பாவில் ஒரு யுத்தம் வருமேயானால், ஜப்பான் பாடு பெரிய திண்டாட்டத்தில் வந்து முடியும். ரஷியா கண்டிப்பாக ஜப்பானை எதிர்த்தே தீரும். ரஷியாவையும், சீனாவையும் ஏக காலத்தில் எதிர்க்க ஜப்பானால் முடியாது. ஆகவே, ஜப்பான், சீனாவில் ஜெயித்த பிரதேசங்களை, விட்டுவிட்டு ஓட வேண்டிவரும். அடுத்த ஐரோப்பிய யுத்தம் வரும் வரையில் சீனா, ஜப்பானை எதிர்த்து நிற்குமேயானால், சீனருக்குப் பூர்ண வெற்றி கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை.

மணியோசை

ராஜகோபாலாச்சாரியார்,
சென்னை.

முதன் மந்திரியே,

சர்க்கார் நிர்வாக விஷயத்தில் நீங்கள் மிக சுறு சுறுப்பாக இருப்பதைக் கண்டு சந்தோஷிக்கிறேன்; ஏழைகளின் விமோசனத்துக்கான சில சட்டங்கள் செய்திருப்பதையும் பாராட்டுகிறேன். இது போன்ற பல விஷயங்களில் வேகமாகச் செல்லும் உங்கள் மூளை, ஹரிஜன ஆலயப் பிரவேச விஷயத்தில் மட்டும் ஆமை வேகத்தில் போய்க்கொண்டிருப்பதின் மர்மம் என்னவோ தெரியவில்லை! இது சம்பந்தமாக உங்கள்மீது பல புகார்களுக்கும், சந்தேகங்களுக்கும் இடமேற்படுகிறது. அந்தச் சந்தேகங்களுக்கு இடங்கொடாமல், ஹரிஜன ஆலயப்பிரவேச விஷயத்தில் விசேஷ முயற்சி எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இதுபோக, மற்றெரு விஷயமுமுண்டு. நீங்கள் முதன் மந்திரியாக இருந்தும், போலீஸ் இலாகா உங்கள் கையிலிருந்தும், போலீஸ் தடியடிகளும், அக்கிரமங்களும் தலைவிரிகோலமாக இருக்கிறது. காலித்தனஞ் செய்யும் சுயமரியாதைக் காரரை அடக்குவதை விட்டு, அந்தக் காலிகளுக்கு மறைமுகமாக ஆதரவு கொடுத்துப், பொது ஜனங்களைப் போலீசார் மிரட்டி வருகின்றனர். சென்னையில் சு. ம. காரர் செய்த காலித்தனமும், கல்லெறி கலாட்டாவும் உங்களுக்குத் தெரியும். உங்கள் தலைக்கே குறிவைத்த அந்த சு. ம. காலிகளை நீங்கள் சும்மா விட்டுவைத்ததால், இன்று, திருச்சியிலும் அதே காலித்தனஞ் செய்திருக்கிறார்கள். சில ஹோட்டல்களை உடைத்தும், சில கடைகளைச் சின்னபின்னப் படுத்தியுமிருக்கிறார்கள். பலருக்கு அடி; பலத்த இரத்தக் காயங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. இவ்வித காலித்தனத்தைத் தட்டியெறிய உடனே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்போகிறீர்களா, அல்லது, இனிமேலும் சாத்வீகம் பேசிக்கொண்டு, கை கட்டிக்கொண்டிருக்கப் போகிறீர்களா? மோட்டார் காரிலும், போலீஸ் பந்தோபஸ்திலும் போகும் உங்களுக்கு இந்தக் காலிகளால் ஆபத்தில்லை; ஏழை மக்களே இந்தக் காலிகளின் அட்டூழியங்களுக்கு இரையாக நேரிடுகிறது. இதைப்பற்றி எத்தனையோமுறை வற்புறுத்தி எழுதி வந்திருக்கிறேன். நீங்கள் அதைக் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை. கடைசியாக மீண்டும் சொல்லுகிறேன். இப்பொழுதே இந்த காலித்தனத்தை அடக்கா விட்டால், தமிழ்நாடு எங்கும் இவர்கள் காலித்தனம் அளவுகடந்து போய்விடும்; அதனல் இரத்தப் பெருக்கெடுத்து ஓடினலும் ஓட நேரிடலாம். ஆதலால் இப்பொழுதே தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

டிங்—டாங்

டாக்டர். ராஜன்,
சென்னை.

சுகாதார மந்திரியே,

நீங்கள் காங்கிரஸ் பிரசாரத்தில் தீவிரமாக இறங்கியிருப்பதைக் கண்டு சந்தோஷம். ஹரிஜனங்கள் விஷயத்திலும் ரொம்ப அக்கரை காட்டி வருகிறீர்கள். எல்லோரும் ஹரிஜனங்களே; எல்லோரும் ஹரிஜனங்களைப்போல் பிறர் சேவையில் ஈடுபட வேண்டியதே யென்று உபதேசஞ் செய்கிறீர்கள். அவ்வித எண்ணம் உங்களுக்கு இப்பொழுது தான் ஏற்பட்டதா, அல்லது, ஏற்கனவே உண்டா? உண்மையாகவே ஹரிஜனங்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற ஆவல் உங்களுக்கு இருக்குமேயானல், ஹரிஜன ஆலயப் பிரவேசச் சட்டத்தை ஏன் துரிதப் படுத்தக்கூடாது? உங்கள் இனத்தைச் சார்ந்த வைதீகர்களுக்குப் பயந்து, அந்தச் சட்டத்தை ஆமை வேகத்தில் கொண்டுவரப் போகிறீர்களா? அப்படியானல், உங்கள் வாய்ப் பேச்சால் என்ன பயன்? கும்பகோணத்தில் சென்னை மாகாண பர்வத ராஜகுல மகாநாட்டை ஆரம்பித்து வைத்த போதுகூட, ''தேசத்தில் ஜாதிபேதங்கள் ஒழியவேண்டும்; எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் காந்தியத்தைச் சார்ந்தவர்களே!'' என்று பேசியிருக்கிறீர்கள். பேச்சளவில் ரொம்ப சரி; ஆனல், கிரியாம்சையில் காட்ட நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? நீங்கள் தயாராக இருந்தபோதிலும், உங்கள் இனத்தார் அதற்குத் தயாராக இல்லை. அதனல்தான் தேசத்தில் இத்தனை அவதி! நாம் எல்லோரும் காந்தியத்தைச் சேர்ந்தவர்கள் என்பது உண்மை; அதில் ஜாதிமத பேதம் கிடையாது. ஆனல், சு. ம. காரரோ நீங்கள் குறிப்பிட்ட காந்தியத்துக்கு ஒரு தனிப்பதம் குறிப்பிட்டு, திரித்துக் கூறியிருக்கிறார்கள். அதுவே காந்தி பரம்பரை! அதாவது, காந்தியத்திலும் பல வகுப்பாகப் பிரித்துக் காட்டுகிறார்கள். திரித்துக் கூறுவதிலும், பச்சைப் பொய் சொல்லுவதிலும் சு. ம. காரர் பேர்போனவர்கள், அவர்களுக்கு அது உடன் பிறந்த குணம். அவர்கள் எப்படியோ தொலைந்து போகட்டும்; அவைத நாம் கவனிக்க வேண்டியதில்லை.

டிங்—டாங்

பி. ராமசாமி ரெட்டியார்,
ஓமந்தூர்.

தலைவரே,

காங்கிரஸ் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு, பிறருக்கு நல்வழி காட்டும் உங்கள் முயற்சியை மனமாரப் பாராட்டுகிறேன். நாகப்பட்டணத்தில் உங்களுக்குக் கிடைத்த பெரிய வரவேற்பைக் கண்டு மகிழ்ந்தேன். 40 காளைகள் பூட்டிய அழகிய ரதத்தில் உங்களை வரவேற்க மக்கள் காத்திருந்தார்கள். நீங்களோ அந்த ரதத்தில் ஏற மறுத்துக், காந்தியடிகள் படத்தை வைத்து, நீங்கள் ஒரு சாரதியாக இருந்து ரதத்தை ஓட்டிச் சென்றீர்கள். உங்கள் ஆடம்பர மற்ற கொள்கையைப் பாராட்டுகிறேன். உங்களுக்கு எனது வணக்கம். ஆடம்பரத்தையும், பேர், புகழையும் விரும்பும் இதர தலைவர்களுக்கு, உங்கள் செய்கை ஒரு சரியான படிப்பினையாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. நீங்கள் வெறும் பிரசாரத்தோடு நின்றுவிடக்கூடாது; காங்கிரசுக்குத் தமிழ் நாடு எங்கும் சரியான அரண் கட்டவேண்டும்; காங்கிரசை உருக்குலைக்க நினைக்கும் எதிரிகள் வாயில் மண்ணைப் போட்டு, அவர்கள் மீண்டும் தலை காட்டவிடாமல் செய்யவேண்டும். இந்தத் திருப்பணியைச் செவ்வனே செய்து முடிப்பீர்களென்று நம்புகிறேன். நீங்கள் மட்டுமல்ல; சகல காங்கிரஸ் தலைவர்களும் இந்தத் திருப் பணியில் உடனே ஈடுபடவேண்டுமென்பதே எனது மனம் நிறைந்த ஆவல். சகல காங்கிரஸ் தலைவர்களும் உடனே முற்படுவார்களாக.

டிங்—டாங்

எம். ரத்னசாமி,
சென்னை.

கிறிஸ்துவ வீரரே!

நீங்கள் ஒரு உன்னத பதவியிலிருக்கிறீர்கள்; இருந்தபோதிலும் கிறிஸ்துவர், மற்றவர் என்று பாரபட்சம் காட்டுவதே இல்லையென கேள்வி. அவ்வளவு தூரம் நடுநிலைமை வகிக்கும் நீங்கள், ஒரு ''தமிழ்கத்தோலிக்க சங்க''க் கூட்டத்துக்குத் தலைமை வகிக்கத் துணிந்தது ஆச்சரியந்தான்! அது எப்படியோ போகட்டும்; சென்னையில் கத்தோலிக்கரோ மிக மிகச் சொற்பம். அப்படியிருந்தும், உழக்கினுள் கிழக்கு, மேற்கு என்பதுபோல், தமிழ் கத்தோலிக்கர், தெலுங்குக் கத்தோலிக்கர், கர்னடகக் கத்தோலிக்கர், பெங்களூர், மங்களூர் கத்தோலிக்கர், கருப்புக் கத்தோலிக்கர், வெள்ளைக் கத்தோலிக்கர் என்று பல பாகுபாடு செய்யப் புகுந்து விட்டீர்கள். இது நியாயமா? தமிழ் கத்தோலிக்கர் சங்கம் எதற்கு? அந்தச் சங்கத்துக்கு இப்பொழுது ஏற்பட்ட அவசரமென்ன? அந்தச் சங்கத்துக்கு நீங்கள் தலைமைவகித்துப் பேசிய போது ''இச் சங்கம் ராஜிய, அல்லது, வகுப்பு சம்பந்தமானதல்ல; தமிழ் கத்தோலிக்கர் நிலைமையை உயர்த்தவே இச் சங்கம் ஆரம்பிக்கப்படுகிறது'' என்றீர்கள். ராஜிய, வகுப்பு சம்பந்தமில்லாவிட்டால், அந்தச் சங்கம் எதற்கு? மத சம்பந்தமாக தமிழர் நிலைமையை உயர்த்துவதென்றல், அதற்கு எத்தனையோ கத்தோலிக்க சங்கங்கள் இருக்கின்றன. தமிழ் கத்தோலிக்கர் சங்கமென்று ஒன்று ஏற்பட வேண்டிய அவசியமே இல்லை. தமிழர் நிலைமையை உயர்த்துவதென்றல், எப்படி உயர்த்துவது? எதில் உயர்வடைய வேண்டும்? உத்தியோகத்திலா, கல்வியிலா, வர்த்தகத்திலா, அல்லது, பாஷையிலா? இன்ன விஷயத்தில் உயர்வடைய வேண்டுமென்று தெரிய வேண்டுமல்லவா? உத்தியோகத்திலென்றல், அரசியலில் சம்பந்தப்படாமல், அது முடியவேமுடியாது. பாஷையில் என்றல், ''தமிழைப்'' பாதுகாக்க சு. ம. காரர் முளைத்திருக்கிறார்கள்! அந்தச் சு. ம. கும்பலிலும், சில ''தமிழ்'' சு. ம. கிறிஸ்துவர் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்! ஆகவே, தமிழ் கத்தோலிக்கர் சங்கத்துக்கு அவசியம் இல்லையென்றே நினைக்கிறேன். ஒரு வேளை தனிப்பட்டவர்கள் உயர்வடையவும், விளம்பரஞ் செய்துகொள்ளவும், லாபமடையவும் இந்தத் தனி ''தமிழ் கத்தோலிக்கர்'' சங்கத்தை ஆரம்பித்திருந்தால், தாராளமாக ஆரம்பித்துக்கொள்ளலாம். யாரும் தட்டிக் கேட்கப் போவதில்லை. ஒரு மலையாள கத்தோலிக்க மந்திரி வந்து விட்டாரே யென்பதற்காகப் பழிவாங்கும் நோக்கத்துடன் இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டிருந்தால் அந்தச் சங்கம் வேண்டவே வேண்டாம்! கத்தோலிக்கரிடையே பிரிவினை செய்யவேண்டாமென்பதே எனது தாழ்மையான வேண்டுகோள். அதனல் கெடுதியே யொழிய நன்மையல்ல.

டிங்—டாங்

லார்டு லின்லித்கோ,
புது-டில்லி.

பிரபு,

சுதேச சமஸ்தானங்கள் நிலைமையை நிர்ணயிக்க ஒரு ராயல் கமிஷன் வரப்போவதாகக்கேள்வி. ஆனல், அந்தக்கமிஷனின் நோக்கமென்ன வென்பது நிச்சயமாகத் தெரியவில்லை. என்றலும் அந்தக் கமிஷனுக்கு ஒரு நோக்கமிருப்பதாகத் தெரிகிறது. வருடமொன்றுக்கு 20 லக்ஷம் ரூபாய்க்குக் குறைவானவருமானமுள்ள குட்டி சமஸ்தானங்களை, இதர பெரிய சமஸ்தானங்களுடன் சேர்த்துவிட அந்தக் கமிஷன் சிபார்சு செய்யக்கூடுமெனத் தோன்றுகிறது. அப்படியானல் அந்த யோசனை உசிதமல்ல; ஏனெனில், இப்போதிருக்கிற சமஸ்தானங்கள் எல்லாவற்றிலும் ஊழல்கள் மலிந்து வருகின்றன. மன்னர்களுக்கு அவர்களுடைய சமஸ்தானங்களை நிர்வகிக்கத் திறமை இல்லை. அந்த சமஸ்தானங்களை இன்னமும் பெரிதாக்கிவிட்டால் மன்னர்கள் தலையே புரண்டுவிடும்! ஆகவே, 50 லக்ஷத்துக்குக் குறைந்த வருமானமுள்ள சமஸ்தானங்களையும், 20 லக்ஷம் ஜனத் தொகைக்குக் குறைந்த சிறு சமஸ்தானங்களையும், அந்த சமஸ்தானங்களுக்கு அடுத்தாற்போலுள்ள பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களுடன் சேர்த்துவிடுவதே சரி. லூதியானவில் கூடிய அகில இந்திய சுதேச சமஸ்தான பிரஜைகள் மகா நாட்டிலும் இப்படியே தீர்மானித்திருக்கிறார்கள். இதனல், குட்டிச் சமஸ்தானங்களின் தொல்லைகள் ஒழியும். வரப்போகும் சமஸ்தான கமிஷனிடம், சமஸ்தான பிரஜைகள் மகா நாட்டில் தீர்மானஞ் செய்ததைச் சிபார்சு செய்யும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அது உங்களுக்கும் பெரிய புண்ணியமாக இருக்கும்.

டிங்—டாங்

ஜின்ன-முஞ்சே,
புது-டில்லி.

ஹிந்து-முஸ்லிம் தலைவர்களே,

இந்தியாவில் வாழும் இரு பெரும் சமூகங்களாகிய ஹிந்துக்களும், முஸ்லிம்களும் எக்கேடு கெட்டாலும் பாதகமில்லை; உங்களுக்கு மட்டும் தலைவர் பதவிகள் இருந்துகொண்டேயிருக்க வேண்டும். அந்தப் பதவிகளுக்காக நீங்கள் இருவரும் எதுசெய்யவும் தயார். அந்த இரு சமூகங்களையும் தூண்டி விட்டு ஒன்றையொன்று கழுத்தறுத்துக் கொண்டாலும் சரிதான்; உங்களுக்கு அதைப்பற்றிக் கவலையே இருக்காது. ஹிந்து சமஸ்தானங்களில் நடக்கும் பொறுப்பாட்சிப் போராட்டத்தை டாக்டர். முஞ்சே எதிர்க்கிறார்; முஸ்லிம் சமஸ்தானங்களில் நடக்கும் போராட்டத்தை ஜின்ன எதிர்க்கிறார். ஏன்? முஸ்லிம் மன்னர்களுக்கு ஆபத்துவரக்கூடாதென ஜின்ன நினைக்கிறார்; ஹிந்து மன்னர்களுக்கு ஆபத்துவரக்கூடாதென முஞ்சே கருதுகிறார். ஆனல், சமஸ்தான மக்கள், உரிமை இழந்து, அடிமைகளாக இருப்பது உங்கள் இருவர்கண்களிலும் இடிக்கவில்லைபோலும்! பொறுப்பாட்சிப் போராட்டத்தைக் கண்டிக்கும் நீங்கள், மன்னர்களின் கண்மூடித் தர்பாரை ஏன் கண்டிக்கக் கூடாது? மன்னர்களின் எதேச்சாதிகாரத்தால், ஹிந்துக்களும், முஸ்லிம்களும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் பணமும், நலமுமே பாழாகிறது. ஆகவே, மக்கள் சுதந்திரமே முதலில் அவசியம். மன்னர்களை ஆதரிக்கும் நீங்கள், மக்கள் சுதந்திரத்தை ஆதரிக்காமல் போனது வெட்கக்கேடென்றே சொல்லுவேன்.

டிங்—டாங்

சங்கநாதம்

கோவில் பூனை — — தேவனுக்கு அஞ்சுமா?

போட்டிப் பரிசுக்கு மூத்தவள்!

புல்லுருவிகள் எச்சரிக்கை!

அது சொத்தை, இது சொள்ளை!!

குயிலைப் பழிக்கும் காகம்

(பூம்-பூம்)

போட்டிப் பரிசுகளை வெளியிடும் பத்திரிகைகளைப் பிடித்த "பிளேக்" நோய், பொது ஜனங்களை அதிகமாக வாட்டத் தொடங்கிவிட்டது. குதிரைப் பந்தயத்தில் பித்துப் பிடித்து அலைபவர்கள், சில புஸ்தகங்களை வைத்துக் கணக்குப் போட்டுக்கொண்டிருப்பதைச் சென்னை வாசிகள் பார்த்திருக்கலாம். அவர்கள் பேசும் பாஷையும், கணக்குப்போடும் விதமும் யாருக்கும் புரியாது; அந்தக் குதிரை பந்தயத்தில் அனுபவமுள்ளவர்களுக்கே அது தெரியும். மற்றவர்களுக்கு அது, ஏதோ கிரீக் பாஷை பேசுவது போலிருக்கும்; அதுபோலவேதான் இந்தப் போட்டிப் பரிசும். போட்டிப் பரிசுப் பத்திரிகைகளை வாங்கி வைத்துக்கொண்டு, அதற்கு விடையளிப்பதிலேயே மண்டையை உடைத்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் கடமைகளைக்கூட மறந்துவிடுகிறார்கள். மாணவர்களுக்குப் படிப்பென்பது கசப்பாகி விடுகிறது; முக்கியமான பரீட்சைக்குப் போகும்போதுகூடப், போட்டிப் பரிசுக்கு விடையளிப்பதிலேயே கவனத்தைச் செலுத்தி வருகின்றனர். இவ்விதமாக மாணவர்களையும், மற்றவர்களையும் இந்தப் போட்டிப் பரிசு சாத்தான் முழுச் சோம்பேறிகளாக்கி விடுகிறது. ஏன்? போட்டிப் பரிசுக்குச் சரியான விடையெழுதி அனுப்பிவிட்டால், 20 ஆயிரம், 30 ஆயிரம் ரூபாய் ஒரேயடியாக வந்து குவிந்து விடாதாவென்று அவர்கள் நினைக்கிறார்கள்! இது மந்திரத்தில் மாங்காய் விழுகிற மாதிரிதான்!

* * *

ஆனால், அவர்கள் நினைப்பது போல், 20 ஆயிரமோ, 30 ஆயிரமோ, அல்லது, 2000, 3000 ரூபாய்களோ போட்டிப் பரிசுக்கு விடையளிப்பவர்களுக்குக் கிடைக்கிறதா? இல்லவே இல்லை. இந்த ஜன்மத்திலல்ல; அவர்கள் ஏழேழு ஜென்மமெடுத்துத் தவமிருந்தாலும், அந்தப் பரிசு கிடைக்கப்போவதில்லை! நூற்றுக் கணக்கில், ஆயிரக் கணக்கில் செலவுசெய்தால், ஒரு வேளை, அதுவும், அதிர்ஷ்டமிருந்தால், குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்வதுபோல், 10, அல்லது 15 ரூபாய் கிடைக்கலாம். அத்துடன் அவர்கள் திருப்தியடையவேண்டியதுதான். அதைத் தவிர, ஆயிரக் கணக்கில் போட்டிப் பரிசில் எதிர்பார்ப்பது, முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டது போலவே முடியும். அதற்குச் சந்தேகமே வேண்டாம்.

அப்படியானால், போட்டிப் பரிசு வெளியிடுவோர், 30 ஆயிரம், 40 ஆயிரம் 50 ஆயிரம் பரிசு கிடைக்குமென்று வெளியிடுகிறார்களே, அதெல்லாம் பொய்யா? அந்தப் பணமெல்லாம் எங்கே போய்ச் சேருகிறது? அதில்தான் போட்டிப் பரிசுக்காரர் ரகசியம் அடங்கியிருக்கிறது. அவர்களே முழுத் தொகையையும் கொள்ளையடிக்கிறார்கள். சிலருக்கு 5000, 10000, 20000 பரிசுகள் கிடைத்திருப்பதாகக் கூறி, பரிசு பெற்றவர் படங்களையும், அவர்களுக்குக் கொடுத்த செக்குகளையும் பிளாக் எடுத்துப் பிரசுரிக்கிறார்களே அதெல்லாம் உண்மையல்லவா; அந்தப் போர்வழிகளும், செக்களும் எப்படி வெளியாகின்றன வென்று கேட்கலாம். நான் போட்டிப் பரிசு வெளியிடுவதாக வைத்துக் கொள்ளுவோம். எங்கேயோ ஒரு மூலையில், ஒரு கிராமத்தில் இருக்கும் என் உறவினருக்கு போட்டிப் பரிசு தொகை 10000 ரூபாய் கிடைத்திருப்பதாகக்கூறி, அவருடைய படத்தைப் பத்திரிகையில் பிரசுரித்தால் அது உங்களுக்கு எப்படித் தெரியும்? அதில் தவறு என்ன? படத்தின் சொந்தக்காரர் என்னைக் கோபித்துக் கொள்ளுவாரா? இல்லை. 10000 ரூபாய் பரிசு கிடைத்ததாகக்கூறி, அவருக்கு 100 ரூபாய் கொடுத்து விட்டால் அதை அவர் வேண்டாமென மறுத்து விடுவாரா? சும்மா இருக்கும் ஒருவருக்கு 100 ரூபாய் கிடைத்தால், அதை அவர் சந்தோஷமாகவே ஏற்றுக் கொள்ளுவார். அவருக்குக் கொடுத்ததாக 10000 ரூபாய்க்குச் செக் எழுதி, அதைப் பிளாக் எடுத்துப் பிரசுரிப்பதால், என்ன கெட்டுப் போகிறது? 10000 ரூபாய் விழுங்குமிடத்தில், சில ரூபாய்கள் செலவு செய்து பிளாக் போடுவதால் நஷ்டமென்ன? பிளாக் ரூபத்தில் வரும் செக் பரிசுக்காரருக்குப் போய்ச் சேரவே சேராது. அது குப்பைத் தொட்டிக்குத்தான் போய்ச் சேரும். இதே போல், போட்டிப் பரிசு ஆபீஸ்களில் இன்று வரையில் நடந்தே வருகிறது. போட்டிப் பரிசு வெளியிடுவோர் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், மற்றும் பலவிதங்களில் சம்பந்தப்பட்டிருக்கும் சகோதரர், சகோதரிகளுக்கும் இந்தப் போட்டிப் பரிசால் நல்ல லாபம்! அவர்கள் போட்டிப் பரிசுக்காகத் தம்பிடி செலவு செய்ய வேண்டாம். நூற்றுக்கணக்காக, ஆயிரக்கணக்காகச் செலவிடும் பொது மக்களுக்கு இந்தப் போட்டிப் பரிசால் தம்பிடி கூடக் கிடைப்பதில்லை; இனிமேல் கிடைக்கப் போவதுமில்லை. அவர்கள் உள்ளதையும் இழந்து, நடுத்தெரு நாராயணவென்று தவிக்க வேண்டியதுதான். இதற்கு எத்தனையோ உதாரணங்கள் கூறலாம்.

* * *

இந்தப் போட்டிப் பரிசுகளை ஆதரிக்கச் சில "எமன்கள்" தோன்றியிருக்கிறார்கள்! போட்டிப் பரிசில் கலந்துகொள்ளும் நண்பர்களுக்கு இந்த எமன்கள் ஆலோசனை கூறப் போகிறார்களாம்! போட்டிப் பரிசுகளுக்கு விடை எழுதிப் பிரசுரித்து லாபந் தேடவும் இந்த எமன்கள் தயாராக இருக்கிறார்களெனத் தெரிகிறது. போட்டிப் பரிசுக் கணக்குப் பார்க்கச் சில சித்திரகுப்தன்களும் தோன்றியிருப்பதுதான் விசித்திரம்! போட்டிப் பரிசின் கொடுமைகளைப் பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டிப், போட்டிப் பரிசை அடியோடு ஒழிக்கும் கைங்கர்யத்தில் இந்த எமன்கள் ஈடுபட்டால் எவ்வளவோ நன்றாக இருக்கும். போலிப் போட்டிப் பரிசு மோசடிகளை வெளியிடுவது ஒரு பெரிய கைங்கரியமாகிவிடாது; எல்லாப் போட்டிப் பரிசுகளும் போலிகளே! எல்லாப் போட்டிகளும் மோசடி நிறைந்தவையே!! அதற்கு ஜோசியம் பார்க்கவேண்டிய அவசியமே இல்லை. ஆகவே. போட்டிப் பரிசுகளையே அடியோடு தலை முழுகி, அவை மீண்டும் தலை காட்டவிடாமல் தட்டி மடக்கவேண்டியது பொது ஜனங்கள் கடமை. சென்ற வாரம் எழுதியதுபோல், அது காங்கிரஸ் சர்க்காரின் நீங்காத கடமை. இவ்விஷயத்தில் ஆச்சாரியார் அலட்சியமாக இருக்கலாம்; ஆனால், பொதுமக்கள் அலட்சியமாக இருக்கவே கூடாது. பொது ஜனங்கள் அலட்சியமாக இருப்பார்களேயானால், இந்தப் போட்டிப் பரிசால் ஜனங்கள் பாழாய்ப் போவது திண்ணம். இந்தச் சூதாட்டத்தில் பொருளை இழந்து, மனமுடைந்து, தற்கொலை செய்து கொள்ளுவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு போவது உறுதி; ஆகவே, எல்லோரும், ஏகமனதாக இந்தப் போட்டிப் பரிசைக் கண்டித்து அதை ஒழிக்க முற்படுவார்களாக.

* * *

இந்தப் போட்டிப் பரிசு சட்டப்படி செல்லுமா? செல்லாது. இ. பி. கோ 294 எ செக்ஷன்படி இந்தப் போட்டிப் பரிசுக் குற்றமாகும். ஆனால், இந்தச் சட்டத்துக்குத் தப்பித்துக் கொள்ளும்வகையில், போட்டிப் பரிசுகளை நடத்தி வருகிறவர்கள் தந்திரமாக நடந்துகொள்ளுகிறார்கள். ஆகவே, போட்டிப் பரிசு சூதாட்டங்களைக் கண்டு பிடித்துத் தண்டிக்கும் பொறுப்பு வாய்ந்த கிரிமினல் இலாகா அதிகாரிகள் இவ்விஷயத்தில் அதிக அக்கரை செலுத்துகிறார்களில்லை. இதற்கு இன்னமொரு காரணமுமுண்டு. "வருஷமான்யம்" போல் இவர்களுக்குக் கைமேல் ஆயிரக் கணக்கில் லாபம் கிடைத்துக்கொண்டிருக்கும்போது சட்டத்தை அவர்கள் ஏன் கவனிக்கப்போகிறார்கள்? இந்த அதிகாரிகளுக்கும், போட்டிப் பரிசு நடத்தி வருகிறவர்கள் ஏன் பயப்படப்போகிறார்கள்? கோவில் பூனை தேவனுக்கு அஞ்சாது! இந்தப் போட்டிப் பரிசு திருட்டுப் பூனைகளும் அதிகாரிகளுக்குப்பயப்படுவதே இல்லை.

* * *

போட்டிப் பரிசு மகாக்கொடியது, மோசடி நிறைந்தது எனப் பல பெரியார் கண்டித்திருக்கிறார்கள் சென்னை சர்க்கார், மாஜி அட்வகேட் ஜெனரல், டி. ஆர். வெங்கிட்டராம சாஸ்திரியார்கூட இதைக் கண்டித்திருக்கிறார். இது கொடிய சூதாட்டமென்கிறார். இங்கிலாந்தில இதை ஒரு குற்றமாகவே கருதுகிறார்கள். போட்டிப் பரிசு மோசடிகள் சம்பந்தமாகப் பிரிவின் கவுன்சில் வரையில் பல வழக்குகள் நடந்திருக்கின்றன. சென்னையில் அவ்வித வழக்குகள் ஏதுவும் நடைபெறவில்லை. சென்னையில் ஏமாந்தவர்கள் எத்தனையோ லக்ஷக்கணக்கானவர்களிருக்கிறார்கள். அவர்கள் வழக்குத் தொடர வழியில்லை; வழியும் கிடையாது. சனிப்பட்ட நபர்கள் மட்டுமல்ல; 1938ம் வருடம் டிசம்பர் மாதம் 12ந்தேதி சரோஜினிதேவி தலைமையில் நடந்த சென்னை ஜில்லா அரசியல் மகாநாட்டில்கூட, இந்தப் போட்டிப் பரிசைக்கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். சென்னை அசெம்பிளியில்கூட இது சம்பந்தமாகச் சிலர் கேள்விகள் கேட்டிருக்கின்றனர். போட்டிப் பரிசு கிடைத்த ஒருவருக்கு, 50 ரூபாய் கொடுத்துவிட்டு, அவரிடம் 3000 ரூபாய்க்கு ரசீது எழுதி வாங்கி

(அடுத்த பக்கம் பார்க்க)

ஒரே மணியில் வாலிபம்
காம பிந்து ரெஜிஸ்டெர்டு
நீற்றுப்போன தாதுவைக் கெட்டிப் படுத்தியும், அதிகப்படுத்தியும் சப்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி இல்லற சுகத்தை இஷ்டம்போல் அனுபவிக்கச் செய்யும். 30 மாத்திரை ரூ. 2—8—0.
Dr. N. V. R கோபாலன், M. D (H.)
மெத்தை, 363, எஸ்பிளனேட், மதராஸ்.

கொண்டது உண்மைதானுவென்று கூட ஒருவர் கேட்டார். 1938-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 15-ந்தேதி சென்னை ராஜாங்க சபையில், சர். கே. வி. ரெட்டி நாயுடுகாருகூட இது சம்பந்தமாகச் சில கேள்வி களை எழுப்பி, போட்டிப் பரிசு எவ்வளவு கொடியதென்பதை எடுத் துக் காட்டினர். அப்பொழுது விவ சாய மந்திரி முனிசாமிபிள்ளை, இது விஷயமாகக் கவனிப்பதாக உறுதி கூறினர். அவர் உறுதி கூறிப் பல மாதங்களாகின்றன. காங்கிரஸ் சர்க் கார் இந்தப் போட்டிப் பரிசுகளை ஒழிக்கும் விஷயத்தில் இதுவரை யில் எத்தகைய நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரிய வில்லை. காங்கிரஸ் சர்க்கார், விசேஷ மாக முதன் மந்திரி ஆச்சாரியார் இவ்விஷயத்தில் கவனஞ் செலுத் தாது போனல், அவருக்கு இதில் ஏதோ அனுகூலமிருக்கிறதென்றே பொதுஜனங்கள் நினைக்க வேண்டி வரும். அப்படி நினைப்பவர்கள் பலர் உண்டென்பதை நான் அறி வேன். ஆகவே, முதன் மந்திரி ஆச் சாரியார் இவ்விஷயத்தில் உடனே கவனஞ் செலுத்தும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

* * *

இந்தப் போட்டிப் பரிசு கொடு மைக்கும், மோசடிக்கும் ஒரு உதா ரணம். ஒருவாரப் பத்திரிகையில் வெளிவந்த ஒரு போட்டிப் பரிசுக் காக, ஒரே நபர், கூப்பன்களுக்காக மட்டும் 1880 ரூபாய் செலவு செய் தார். போட்டிப் பரிசு வெளியான 3760 பிரதிகள் வாங்குவதற்கு 470 ரூபாய் செலவு செய்தார். ஆக, ஒரு போட்டிப் பரிசுக்காக அவர் 2350 ரூபாய் செலவு செய்தும், அவருக்கு என்ன கிடைத்தது? ஒரு சில ரூபாய் களைத் தவிர, அவருக்கு ஒரு பரிசும் கிடைக்கவில்லை. 2350 ரூபாயும் வீண்; சில மாதங்களில் அவை யாவும் கரியாகிவிட்டன. இதை நீங் கள் நம்புவது கஷ்டந்தான் ஆனல், இது முற்றிலும் உண்மை. அவசியம் நேர்ந்தால் அந்தப் பேர்வழிக்குக் கிடைத்த போட்டிப் பரிசு ஆபீஸ் ரசீதை அப்படியே பிளாக் செய்து பிரசுரிக்கத் தயார். ஒரே நபர் ஒரு போட்டிப் பரிசுக்காக, 2350 ரூபாய் செலவு செய்திருப்பாரேயா னல், இதேபோல் எத்தனையோ ஆயி ரம் போட்டிப் பரிசுகளுக்கு எத்த னையோ லக்ஷக்கணக்காக பணத்தை எத்தனையோ லக்ஷக் கணக்கான பக் கள்விரையஞ்செய்திருப்பார்கள்! இந் தப் பணத்தையெல்லாம் கொள்ளை கொண்டவர்கள்யார்? போட்டிப்பரிசு சொந்தக்காரர் என்பதில் சந்தேக மில்லை. இந்தக் கொள்ளைக்கும், கொடுமைகளுக்கும் மக்களை ஆளாக்கி விடுவதா? பொதுஜனங்களே யோசி த்து முடிவு செய்வார்களாக. போட் டிப்பரிசுக்குப் பதிலாக இப்பொழுது

- சங்கநாதம் -

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஒரு புதிய தந்திரத்தில் இறங்கியிருக் கிருர்கள். அதுவே அதிர்ஷ்ட நம்பர்! இந்த அதிர்ஷ்ட நம்பர், அஷ்ட தரித்திரம் போட்டிப் பரிசுக்கு, மூத் தவள்தான் எவ்விதத்திலும் இளைத்த தல்ல! இதுவும் கொள்ளையடிக்க மற்ருெரு குறுக்கு வழியென்பதை மக்கள் மறந்துவிடவேண்டாம்!

* * *

மக்கள் உயிரையும், பணத்தை யும் உறுஞ்சும் இந்தப் போட்டிப் பரிசுகளை ஒழிக்க, மக்கள் வீர் கொண்டு வரவேண்டும். தமிழர் வீர் கொண்டு எழுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இதைவிட அதிக வீர்கொண்டு தமிழர் எழவேண்டி யிருக்கிறது. எதற்காகத் தெரியுமா? சுயமரியாதைக்கார் அட்டூழியங் களையும், காலித்தனத்தையும் ஒடுக்க. சு. ம. இயக்கமே ஒரு புல்லுருவி இயக்கம். வரவர மாமியாள் கழுதை போலானுள் என்ற கதையில் வரவர மோசமாகிக் கொண்டு வருகிறது. தமிழரின் இரத்தத்தை உறுஞ்சி, தமிழர் மானத்தைப் போக்கும் மானங்கெட்ட இயக்கமாக அது மாறிக்கொண்டு போகிறது. அந்த இயக்கம் இனிமேல் தமிழ்நாட்டில் தலைகாட்டவிடாமல் மடக்கவேண் டும்; அது தமிழர் கடமை என்பதை மறந்துவிடக்கூடாது. சு. ம. காரர், "தமிழ்மீது" மகா பக்தியுடையவர் கள் போல காட்டிக்கொண்டார்கள்; அதற்காக ஹிந்தியை எதிர்ப்பதாகக் கூறினர்கள். அவர்கள் தமிழ் பக்தி எல்லாம் காங்கிரசையும், காங்கிரஸ் மந்திரி சபையையும் ஒழிக்கும் பக்தி தானென்று அடிக்கடி எடுத்துக் காட்டி வந்திருக்கிறேன். அது உண் மையாகிவிட்டது. சு. ம. காரருக்கு உண்மையான தமிழ் பக்தி கிடை யாது; தமிழ் நாட்டின்மீதும் பக்தி கிடையாது. அது தமிழரை ஏமாற்ற சு. ம. காரர் கைகொண்ட ஒரு தந்தி ரமே யொழிய வேறல்ல. அவர்கள் ஹிந்தி எதிர்ப்பு வரவரக் குட்டிச் சுவராகிக்கொண்டு வருகிறது. ஆகவே, அவர்கள் எங்கும் காலாடித் தனத்தில் இறங்கி இருக்கிருர்கள். திருச்சியில் நடந்த காங்கிரஸ் கூட் டத்தில், அவர்கள் காலித்தனம் அத்து மீறிப் போய்விட்டது. அது மட்டுமா? இனிமேல் காங்கிரஸ்காரர் கூட்டங்கள் போலீஸ் பாதுகாப்பு இல்லாமல் நடக்க முடியாது என்று கூறக்கூடத் துணிந்து விட்டார்கள். அதாவது, காலித்தனஞ்செய்வதில் சு. ம. காரர் துணிந்திருக்கிருர்க ளென்பதே இதின் அர்த்தம், அவர்கள் கைவரிசையைத் திருவாரூ ரிலும், சர்தார். வேதரத்னம் பிள்ளை கூட்டத்தில் காட்டியிருக்கிருர்கள். பெத்துநாய்க்கன் பேட்டையில் நடந்த தேசீய வாரக் கூட்டத்திலும் சு. ம. காரர் காலித்தனஞ்செய்திருக் கிருர்கள். "தமிழ் வாழ்க, ஹிந்தி ஒழிக" என்று அவர்கள் கூச்சலிடுவ தெல்லாம் பறந்து போயிற்று. "காங் கிரஸ் ஒழிக, காந்தி ஒழிக, தேசியக் கொடி என்னும் மோசடிக்கொடி ஒழிக!" என்ற கூச்சலை இப் பொழுது ஆரம்பித்திருக்கிருர் கள். "ஆச்சாரியார் ஆட்சி, ஒழிக! உச்சிக்குடுமி ஆட்சி ஒழிக!!" என்ற பழைய கூச்சலுக்கும் இப் பொழுது இரு மடங்கு உயிர் கொடுத்து வருகிருர்கள். பெத்து நாய்க்கன்பேட்டையில் அவர்கள் இந்தக் கூச்சலோடு நின்றுவிட வில்லை; அங்கு தேசீய வாரத்தைக் கொண்டாடக் கட்டியிருந்த காங் கிரஸ் தோரணங்களையும், தேசீயக் கொடிகளையும் சிதைக்க முயற்சித் தனர். இதைப் பொது ஜனங்கள் தடுக்கவே, போலீசார் வந்து பொது ஜனங்களைத் தடியால் அடித்து வெருட்டினர்கள். போலீசார் அங்கு நடந்து கொண்டதைக் கவனித்தால், அவர்களும் சு. ம. கார ருக்கு உடந்தையாக இருந்து, தடி யடி தர்பார் நடத்தியதாகத் தெரி கிறது. கூட்டத்தில் ஜனங்கள் கல் லெறிந்ததாகவும், போலீசாருக்கு அடிப்பட்டதாகவும் கூறுகிருர்கள். இது சுத்தப் பொய்; போலீ சாருக்கு மட்டும் கல்லடிப்பட்டது நம்பக் கூடியதல்ல. கூட்டத் திலிருந்த வேறு எவருக்கும் கல்லடி படாது போனது ஆச்சரியந்தான்! போலீசார் சிற்சில இடங்களில் சு. ம. காரருக்கு மறைமுகமாக ஆதரவு கொடுத்துப், பொது ஜனங் களை மடக்குவது வழக்கமாயிருந்து வருகிறது. காங்கிரஸ் மந்திரிகள் இதற்கு இடங் கொடுத்துக் கொண்டிருப்பது கூடாது. அது சகிக்கக்கூடியதல்ல; பிரதம மந்திரி ஆச்சாரியார் இந்த விஷயத்தைக் கவனித்துப், போலீஸ் அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுத் துக்கொள்ளும்படி கேட்டுக்கொள் ளுகிறேன். இன்றேல், காங்கிரஸ் மந்திரி சபைமீது ஜனங்கள் வெறுப் படைய நேரிடுமென்று எச்சரிக்க விரும்புகிறேன்.

* * *

காங்கிரஸ் சர்க்கார் செய்கிற ஒவ் வொரு காரியத்தையும் சு. ம. காரர் எதிர்ப்பதிலேயே கண்ணும் கருத்து மாயிருக்கிருர்கள். அந்தக் காரியங் களால் பொது ஜனங்களுக்கு நன் மையா, தீமையா என்பதைக்கூடக் கவனிக்கிருர்களில்லை. காங்கிரஸ் மந்திரிகளை எதிர்க்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் எதிர்த்து வருகிருர்கள். மதுவிலக்குச் சட்டம், விவசாயிகள் கடன் நிவாரணச் சட் டம், இதுபோன்ற சட்டங்களால் விவசாயிகளும், ஏழைகளும் அதிகக் கஷ்ட நஷ்டமடைய நேரிடுகிற தென்று சு. ம. காரர் கூறுகிருர்கள். மதுவிலக்குச் சட்டம்கொண்டுவருவ தற்குமுன் குடிகாரர்களைஏன் கலந்து கொள்ளக் கூடாது, அவர்களுடைய சம்மதத்தையும் ஏன் பெறக்கூடா தென்று சு. ம. காரர் கேட்கிருர் கள். நிதான புத்தியுள்ள எவ ராவது இந்தக் கேள்வியை ஒப்புக் கொள்ளுவார்களா? மண்டையில் கோளாறு உள்ளவர்களே இந்தக் கேள்வி கேட்பார்கள்! மதுபானத் தைவிடக் கொடியது வேறு இருக்க முடியாது. அது கொடிய விஷத்திற் குச் சமம்; அந்த விஷத்தைக் குடித்து, மடியும் கோடிக்கணக்கான ஏழை மக்களைக் காப்பாற்றுவது குற்றமா? அதற்காகக் குடியர்க ளிடம் அபிப்ராயம் வேறு கேட்க வும் வேண்டுமா? இவ்விதம் கேள்வி கேட்பவர்கள் அறிவுள்ளவர்களா? இல்லை; அறிவற்ற சுத்த, சு. ம. க் காரரைத் தவிர வேறு எவரும் இந்தவிதமான முட்டாள் கேள்வி யைக் கேட்கத் துணியவேமாட்டார் கள். விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தால் விவசாயிகளுக்கு நன்மையுண்டு. ஆனல், சு. ம. காரரோ விவசாயிகளின் நாண யம் போச்சு என்று கொக்கரிக் கிருர்கள். அவர்கள் கூறுவது மெய்யா, பொய்யா வென்பதைப் பொறுத்துப் பார்க்கவேண்டுமாம்! அதையே நானும் சொல்லுகிறேன். காங்கிரஸ் மந்திரிகள் செய்திருக்கும் சட்டங்களால் ஏழை, மக்களுக்கு நன்மையா, தீமையா வென்பதைப்

(அடுத்தபக்கம் பார்க்க)

ஜி. சுன்னையா கம்பெனி
இரும்புப்பெட்டிவியாபாரம்
கவர்ன்மெண்டு
ரயில்வே, பாங்கு
கோவாபரேடிவ்சொஸைடி
வியாபாரிகளுக்கும்,சப்ளையர்கள்
137, பிராட்வே, மதராஸ்

காரம், மணம், குணம், நிறம், ஒருங்கே அமைந்த
வி. என். ஷண்முகம்
பட்டணம் பொடியை
எப்பொழுதும் உபயோகியுங்கள்
நெ. 8, ஆச்சாரப்பன் சந்து, மதராஸ்.
(ஏஜெண்டுகள் தேவை)

சங்கநாதம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

பொறுத்துப் பார்ப்போம். ஒரு சட்டம் கொண்டு வந்தவுடன் அதின் நன்மை, தீமைகளைப் பகுத்தறிந்துவிட முடியாது. சட்டத்தின் போக்கையும், அதனால் ஏற்படக்கூடிய பலாபலன்களையும் பின்னால்தான் நன்றாக அறிய முடியும். அதுவரையில் சு. ம. காரார் ஏன் பொறுத்திருக்கக் கூடாது? இப்பொழுதே அந்தச் சட்டங்களை ஏன் எதிர்க்கவேண்டும்? நன்மை, தீமைகளை அறிந்தபின் எதிர்த்தால் அதில் அர்த்தமுண்டு; மக்களும், சு. ம. காரார் கூறுவது சரியா, இல்லையாவென்பதை உணருவார்கள். அதை விட்டு, காங்கிரஸ் மந்திரிகளை எதிர்க்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் எதிர்த்து வருவது அக்கிரமமேயொழிய, வேறல்ல. காங்கிரஸ் மந்திரிகள் கொண்டுவந்திருக்கும் சட்டங்களால் நன்மை ஏற்படட்டே தீரும்; அதற்குச் சந்தேகமில்லை. அதை எல்லோரும் அறியவே போகிறார்கள். காங்கிரஸ் மந்திரி சபையை மனமார வாழ்த்தவும் போகிறார்கள். அவ்வித நிலைமை பின்னால் ஏற்படப்போவது நிச்சயம். இதை அறிந்தே சு. ம. காரார் இப்பொழுதே அந்தச் சட்டங்களை எதிர்த்து, அது சொத்தை, இது சொள்ளையெனக் கூச்சல் போடுகிறார்கள். சு. ம. காரரின் கூச்சலின் அந்தரங்க நோக்கம் இதுதான்.

* * *

புளுகுவதில் பேர்போன சு. ம. காரார் ஒன்றை பத்தாகவும், பத்தை நூறாகவும் திரித்துக் கூறுவதில் பின்வாங்குவதே இல்லை. அணுவை மலையாக்குவதில் நிபுணர்கள். பட்டாபி சீதாராமய்யா விற்பனை வரியை ஆதரித்துச் சென்னையில் பேசினார். வியாபாரிகள் வரி கொடுக்கவேண்டியதின் நியாயத்தைத் தெளிவான முறையில் எடுத்துக் காட்டினார். தொழிற்சாலைகளுக்கும், வர்த்தகர்களுக்குமிடையே இருக்கும் தரகர்களுக்கு இதனால் வேலையில்லாது போகலாம். தரகர்கள் ஒழிந்தாலும் பாதகமில்லை; அதினால் வர்த்தகம் விருத்தியடையுமென்றார். அவர் வியாபாரிகள் ஒழிந்துபோகவேண்டும்; எல்லோருமே ஒழிந்துபோக வேண்டுமென்று கூறியதே இல்லை. இதை சில சு. ம. சாமாக்களும், தர்மாக்களும் ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கி, சு. ம. பத்திரிகைகளில் எழுதி வருகிறார்கள். முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல், படு பொய் சொல்லி வருகிறார்கள். தமிழர் இந்தப் படு பொய்களை நம்பி மோசம் போக வேண்டாம். டாக்டர் பட்டாபி சீதாராமய்யா பேசியது பல தினசரிப் பத்திரிகைகளில் வெளிவந்திருந்ததை வாசகர்கள் படித்திருப்பார்களென்றே நினைக்கிறேன்.

* * *

ராஜகோட் தகராறு சம்பந்தமாக காந்திஜி பட்டினி கிடந்தது எல்லோருக்கும் தெரியும். ஜின்னாவே வலிய வைசிராயைக் கண்டு பேசி, மகாத்மாவின் உயிரைப் பாதுகாத்ததாகச் சு. ம. பத்திரிகைகள் அப்பொழுது ஒரு கயிறு திரித்தன. அதுவும் சுத்தப் பொய். ராஜகோட் சம்பந்தமாக வைசிராய், ஜின்னாவைக் கலந்துகொள்ளவில்லையென ஜின்னாவே சீறிப் பாய்கிறார். இப்பொழுதாவது சு. ம. காரருக்குப் புத்தி வருமா? அவர்கள் கூறும் பொய்கள் யாவும் தானாகவே அம்பலத்துக்கு வந்துவிடுவதை அறிந்து, இனிமேலாவது அவர்கள் புளுகு மூட்டையை மட்டுப்படுத்திக் கொள்ளுவார்களென்று நினைக்கிறேன். காந்திஜி வைசிராயைக் கண்டு பேசி, ராஜகோட் சம்பந்தமான தகராறை பெடரல் கோர்ட் பிரதம நீதிபதியின் தீர்ப்புக்குவிட ஒப்புக்கொண்டதைக்கூட, சு. ம. காரார் பிரமாதமாக எடுத்துக்காட்டி, பெடரேஷனை எதிர்க்கும் காந்திஜி, பெடரல் கோர்ட் பிரதம நீதிபதியின் தீர்ப்பை ஒப்புக்கொள்ளுவது ஒழுங்கா, அது பெடரேஷனை ஒப்புக்கொண்டது போலாகாதாவென்று காந்திஜியைக் கிண்டல்செய்தனர். காந்திஜி அதற்கு மண்டையில் அடித்தாற்போல் பதில் கொடுத்திருக்கிறார். ராஜகோட் தகராறைப் பெடரல் கோர்ட் பிரதம நீதிபதியின் தீர்ப்புக்கு விட்டது, பெடரல் கோர்ட் பிரதம நீதிபதி என்பதற்காகவல்ல; அவர் ஒருசட்ட நிபுணர் என்பதை உத்தேசித்துத்தானென்றும், அதனால் பெடரேஷன் எதிர்ப்பு இம்மியளவுகூடத் தளரவில்லையென்றும் காந்திஜி கூறுகிறார். இதற்கு சு. ம. காரார் என்னபதில் கூறப் போகிறார்கள்? மொத்தத்தில் சு. ம. காரரே வெறும் புரட்டுப் பேர்வழிகள்; அவர்களுக்கு நியாயமோ, நேர்மையோ கிடையாது. கண்டதே காட்சி கொண்டதே கோலமென்று திரிபவர்கள். அவர்கள் போக்கையும், பித்தலாட்டத்தையும் தமிழர் இப்பொழுது நன்றாக அறிந்திருப்பார்களென்பதில் சந்தேகமில்லை.

* * *

ஆந்திர மாகாணப் பிரிவினை சம்பந்தமாக சில ஆந்திரர் தீவிரமாக இருக்கிறார்கள்; சிலர் அதில் கவனஞ் செலுத்தக் காணோம். ஆனால், சு. ம. காரரோ ஆந்திரருக்கு மேல் துள்ளுகிறார்கள். ஏன்? தமிழ்நாடுமீதுள்ள பக்தியாலா? இல்லவே இல்லை; காங்கிரஸ் மந்திரிகளைத் தொந்திரவு செய்யும் நோக்கமாகத்தான்! ஆந்திரர், சென்னை நகரத்தைப் பங்கு போட்டுக்கொள்ள நினைக்கிறார்கள்; ஆந்திரப் பிரிவினையில் தீவிரமாக இருக்கும் சு. ம. காரர் சென்னையை ஆந்திரர்களுக்குக் கொடுக்கத் தயாராவென்று கேட்கிறேன். சு. ம. காரர் எதற்கும் தயார்! காங்கிரஸ் மந்திரி சபை ஒழிந்து, காங்கிரசும் சின்னாபின்னமாகப் போவதாயிருந்தால், சென்னை நகரத்தை மட்டுமல்ல, தமிழ் நாட்டையே அவர்கள் ஆந்திரருக்குத் தத்தஞ் செய்துவிடவும் தயங்கமாட்டார்கள். சு. ம. காரரின் தமிழ்ப் பக்தி, தமிழ் நாட்டின் பக்தி எல்லாம் காங்கிரஸ் எதிர்ப்புக்குள் அடங்கிவிடும். சு. ம. காரரின் தமிழ்ப் பக்தியை அறிந்து தமிழரும், மற்றவர்களும் இனிமேல் அவர்கள் விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தப் புல்லுருவிகளை ஒழித்தாலொழிய தமிழ் நாடு நலம்பெறாதென்பது தமிழருக்கு ஞாபகமிருக்கட்டும்.

* * *

காங்கிரஸ் மந்திரிகளும், காங்கிரஸ் அசெம்பிளி மெம்பர்களும் தமிழ் நாட்டில் யாத்திரை செய்து, காங்கிரஸ் மந்திரிகள் செய்யும் சட்டங்களுக்கு ஆதரவு தேடி வருகிறார்கள். இதைக் கண்டு சு. ம. காரர் வயிறு எரிகிறது; அந்தப் பொறாமையால் காங்கிரஸ்காரரைக் கேலி செய்கிறார்கள். பதவிக்கு வந்து இருவருடங்கள்கூட ஆகவில்லை; அதற்குள் காங்கிரஸ் மந்திரி சபைக்கு ஆதரவு குறைந்துவிட்டது; மந்திரிகளும், மற்றவர்களும் ஊர் ஊராகச் சென்று, மந்திரி சபைக்கு ஆதரவு தேடப் புறப்பட்டு விட்டார்களென்று சு. ம. பத்திரிகைகள் கிண்டலாக எழுதியிருக்கின்றன. சு. ம. காரரோ ஊர் ஊராகச் சென்று, பிச்சையெடுத்துக் காலித்தனஞ் செய்து தமிழர் ஆதரவைத் தேடி வருகிறார்கள். இதைப் பற்றி அதே சு. ம. பத்திரிகைகள் என்ன எழுதி வருகின்றன தெரியுமா? சு. ம. காரருக்கு நாடெங்கும் ஆதரவு கிடைத்துவருகிறது! ஆதலால் சு. ம. தோழர்கள் ஊர் ஊராகப் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று சு. ம. பத்திரிகைகள் வாய் கூசாமல் கூறுகின்றன. காங்கிரஸ் மந்திரிகள் பிரசாரத்துக்குப் போனால், அவர்களுக்கு ஆதரவில்லை; சு. ம. காரர் போனால் அவர்களுக்கு நிறைய ஆதரவு இருக்கிறது! இது எப்பேர்ப்பட்ட வாதம்? குதர்க்கவாதமா, அல்லது, முட்டாள்வாதமா; அல்லது, வாதமில்லாத பிடிவாதமா? பிடிவாதமென்றே சொல்லவேண்டும். குயிலைக் காகம் பழித்த கதை உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அந்தக் காகத்தைப் போலவே சு. ம. காரர் போக்கு இருக்கிறது. சு. ம. காரர் விசித்திரப் போக்குக்கு இது ஒரு "சாம்பில்" இதுபோலவே அவர்கள் போக்கு எப்பொழுதும் இருந்துவருகிறது. அவர்கள் வாதங்களும், அப்படித்தான்; எல்லாம் பைத்தியக்காரப் போக்கு! இன்றேல், பல சு. ம. தோழர்கள் சர்க்காரை எதிர்த்து, மறியல் செய்து, மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வெளியில் வருவார்களா? 'இந்த வாரத்தில் கூட 11 சு. ம. தோழர்கள் மன்னிப்புக் கேட்டு விடுதலையடைந்ததாகத் தெரிகிறது. சு. ம. காரர் செய்வதே சரியென, அவர்களுக்காகக் கட்டியங் கூறியலையும் பாதி சு. ம. காரருக்கு இதைக் கண்டாவது மயக்கம் தெளியுமென்று நினைக்கிறேன்.

T. Kuppuswamy Naidu,
OPTICIAN

129 & 121. Moor Market, Madras.
PLEASE PAY US A VISIT

75 வருஷ காலமாக
மிகப் பிரக்யாதியுடன் லக்ஷக்கணக்கான
இந்திய குடும்பங்கள் தினமும்
* உபயோகித்து ஆனந்திக்கும் *
மிஸ்கி A மார்க்
பெருங்காயம்
Sign of Quality

ASAFOETIDA

போலி விளம்பரங்களிலும் புது புது மார்க்குகளிலும் பணத்தைக் கொடுத்து ஏமாற வேண்டாம். எந்தக்காலமும் உள்ளது A மார்க்குத்தான். A மார்க்கைப் பார்த்து வாங்கினால் ஏமாற மாட்டீர்கள்.

1 பவுண்டு, ½ பவுண்டு, ¼ பவுண்டு, 1 பலம் பாக்கிங்குகளிலும் 1 சேர் அழகான டின்களிலும்
எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்
இன்றே வாங்கி இன்புறுங்கள்
வல்லபதாஸ் தேஜ்பால்
கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.

குலைக்கும் நாய் கடிக்குமா?

பிரிட்டன்மீது வசை :: :: பேயாய் அலைகின்றனர்

பிரிட்டனுக்கு ஆண்மை இல்லை; ஹிட்லர், முஸோலினி போன்ற சர்வாதிகாரிகளை எதிர்க்கத் தைரியமில்லை. வெறும் பூச்சாண்டி காட்டுவதோடு நின்றுவிடுகிறது. காரியத்தில் இறங்கப் பயம். இதனால், ஹிட்லருக்கும், முஸோலினிக்கும் நல்ல தைரியம். ஏற்பட்டுவிட்டது. அவர்கள் பிரிட்டனையும், பிரான்சையும் அலட்சியமாகக் கருத ஆரம்பித்துவிட்டார்கள். அந்த இரு தேசங்களும் குலைக்கும் நாய்கள்; குலைப்பதோடு நின்றுவிடும்; கடியாது என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். ஆகவே, அவர்கள் நாடு பிடிப்பதிலும் மும்முரமாக இருக்கிறார்கள். அதற்காக ஒரு புதிய திட்டமும் போட்டிருக்கிறார்களெனத் தெரிகிறது.

அல்பேனியாமீது படையெடுத்துச் சென்றிருக்கும் முஸோலினி.

ஐரோப்பாவை இன்று மிரட்டிக்கொண்டிருப்பவர் ஹிட்லரும், முஸோலினியும். ஹிட்லர், ஐரோப்பாவின் பெரும் பாகத்தைக் கைப்பற்றிக்கொண்டார்; இன்னமும் பெரும்பாகத்தைக் கைப்பற்றத் திட்டம் போட்டிருக்கிறார். முஸோலினி அபிசீனியாவை ஏப்பம் விட்டார்; ஆப்ரிக்காவிலுள்ள பிரஞ்சு காலனிகள்மீது அவர் கண்ணோட்டம் பாய்ந்தது; ஆனால், அந்தப் பிரதேசங்கள்மீது படையெடுத்துச் செல்ல அவருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆகவே, அவர் திடீரென அநாதியான அல்பேனியா மீது பாய்ந்தார். அல்பேனியா மக்களைச் சித்திரவதை செய்தார்; வெடிகுண்டுகள் பறந்தன; இரத்தப் பெருக்கெடுத்தோடியது. கடைசியாக அல்பேனியா மக்கள் இரத்தத்தின்மீது, அங்கு இதாலியின் ஆட்சியை ஏற்படுத்தியிருக்கிறார். அல்பேனியாவை நிர்வகிக்க அல்பேனிய பிரபுக்கள் அடங்கிய ஒரு கமிட்டியை ஏற்படுத்திய போதிலும், அங்கு இதாலியர் ஆதிக்கம் ஏற்பட்டுவிடுமென்பதில் சந்தேகமில்லை. அல்பேனியா மன்னர் ஜோகு, அல்பேனியாவிலிருந்து, கிரீஸ் தேசத்துக்குப் போய்விட்டார். அவர் மீண்டும் திரும்ப வரப்போவதில்லை. ஆகவே, அல்பேனியா இனிமேல் இதாலி வயிற்றுக்குள் போய்விடும். அட்ரியாடிக் சமுத்திரத்தின் ஆதிக்கமும் இனிமேல் இதாலி கைக்கு வந்து விடும். அப்படியானால், அல்பேனியாவுக்கு அடுத்தாற் போலிருக்கும் யுகோஸ்லாவியாவுக்குத் தலையிடிதான்! ஆனால், இதே யுகோஸ்லாவியாமீது ஹிட்லரும் கண் வைத்துக் கொண்டிருக்கிறார். ஹிட்லர், முஸோலினி இவர்களில் எவர் யுகோஸ்லாவியா விஷயத்தில் முந்திக் கொள்ளுவாரோ தெரியவில்லை. ருமேனியா, பல்கேரியா, யுகோஸ்லாவியா முதலிய நாடுகளில் எண்ணெய்க் கிணறுகள் ஏராளமாக

பிரிட்டனை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய ஜெனரல் பிராங்கோவை ஹிட்லர் தூண்டிவிடுகிறார். ஆனால், பிராங்கோ பிரிட்டனுக்கு எதிராகக் கிளம்புவாரா என்பது சந்தேகந்தான்.

வுண்டு; ஆகாரவசதிகளுமிருக்கிறது; யுத்ததளவாடங்களுக்கு ஏற்ற லோகங்களும், சுரங்கங்களும் அங்கு ஏராளமாக இருக்கின்றன. ஆகவே, அந்த நாடுகள்மீது ஹிட்லர், முஸோலினி முதலியோர் கண் பாய்ந்திருப்பதில் ஆச்சரியமில்லை. இருநாடுகளிலும் ஆகாரப் பஞ்சம்; மூலப் பொருள்கள் தேவை. அதற்காகத்தான் ஹிட்லரும், முஸோலினியும் நாடு பிடிப்பதில் பேயாக அலைகிறார்கள்!

ரோம்-பேர்லின் அச்சு!

ரோம்-பெர்லின் அச்சைப் பற்றி, இதாலியரும், ஜெர்மனியரும் பெருமையாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். ஹிட்லரை இதாலியர் ஆதரிப்பதும், முஸோலினியையும் ஜெர்மனியர் ஆதரிப்பதும் சர்வ சாதாரணம். ரோம்-பெர்லின் அச்சை அசைக்க முடியாது; அதைஉடைக்க முயற்சிப்பவர்கள் கதி அதோகதிதான் என்று ஜெனரல் கோரிங், முக்கியமான இதாலியப் பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார். அத்தோடு நின்றுவிட்டாரா? இல்லை; பிரிட்டனையும், பிரான்சையும் கேலி செய்கிறார். அவைகள் "குலைக்கிற நாய்கள்; கடியாது" என்று கிண்டல் செய்கிறார். ஜனநாயகத்தைப் பற்றிப் பேச இந்த இரு நாடுகளுக்கும் என்ன உரிமை இருக்கிறதென்

பிரிட்டனையும், பிரான்சையும் வெறும் குலைக்கும் நாய்கள் என்றும் கூறும் ஜெனரல் கோரிங். ஹிட்லர் வெறி நாயென்றால் இவர் கடி நாய் என்பது பொதுவான அபிப்ராயம்!



ஐரோப்பாவை ஜெயிக்கப் புறப்பட்டிருக்கும் ஹிட்லர். இவரையே ஐரோப்பா "வெறிநாய்" என்று அழைக்கிறார்.

றும் கேட்கிறார். பிரிட்டனும், பிரான்சும் உரமாக குலைக்கும் குரலோசையைக் கேட்டால் எவரும் திடுக்கிட்டுப் போவார்கள்; ஆனால், அந்தக் குரலோசையைக் கேட்டு யாரும் பயப்படவேண்டிய அவசியமே இல்லையென்று கோரிங் சொல்லுகிறார். ஜெர்மனிக்கும், இதாலிக்கும் விரோதமாகப் பிரிட்டன் இதர தேசங்களைத் தூண்டி விடுகிறது. ஆனால், எந்தத் தேசங்களும், ரோம்-பெர்லின் அச்சை அசைக்கவோ, உடைத்தெறியவோ முடியாது. இதுதான் ஜெனரல் கோரிங் குலைப்பதின் சுருக்கம். ஏனெனில், ஹிட்லர் ஐரோப்பாவின் வெறி நாய் என்பது உலக மக்கள் கருத்து. ஹிட்லருக்கு அந்தப் பட்டம் கொடுத்தவர் பேர்பெற்ற ஹாஸ்ய நடிகர் சார்லி சாப்லின். இது பொருத்தமான பெயர்தான்! ஹிட்லர் வெறிநாயென்றால், கோரிங் ஒரு கடிநாய் என்று சொல்லலாம். ஏனெனில், ஹிட்லர் இட்ட கட்டளைப்படி நடப்பவர் ஜெனரல் கோரிங்.

ரகசியமென்ன?

ரோம்-பெர்லின் அச்சைப்பற்றி, இதாலியரும், ஜெர்மனியரும் பெருமையடித்துக் கொள்ளுகிறார்கள். வெளிக்குத்தான் இவர்கள் அச்சு அசைக்க முடியாத உறுதியுடன் தோன்றுகிறது! ஆனால், அந்தரங்கத்தில், அந்த அச்சு உறுதியே இல்லை. ஜெர்மனிமீது இதாலிக்குப் பொறாமையுண்டு; இதாலிமீது ஜெர்மனிக்குப் பொறாமையுண்டு. ஹிட்

(அடுத்த பக்கம் பார்க்க)

போலி மார்க்கு சுருட்டுகளைக் கண்டு உஷார்! எங்கும் கீர்த்தியுடன் விளங்குவது
V. ARUMUGA CHETTY
விநாயகர் மார்க்கு சுருட்டுகள்
வ. ஆறுமுக செட்டியார், நெ. 13, அண்ணாபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்.

குலைக்கும் நாய் கடிக்குமா?

(முன் பக்கத் தொடர்ச்சி)

லர் வெற்றியைக் கண்டு முஸோலினி வயிறெரிகிறார். ஹிட்லர் தலையைத் தட்ட அவர் தருணம் பார்த்துக்கொண்டிருக்கிறார். ஹிட்லருக்குப் போட்டியாகவே, அவர் அல்பேனியாமீது படையெடுத்துச் சென்றார். என்றாலும், ஹிட்லர் வெற்றி, முஸோலினியின் வெற்றி; முஸோலினியின் வெற்றி ஹிட்லர் வெற்றியென்று வெளிக்குச் சொல்லுகிறார்கள். ஹிட்லரைப் பல இதாலியர் தீவிரமாக எதிர்க்கின்றனர். அதேபோல் முஸோலினியையும், பல ஜெர்மனியர் பலமாக எதிர்க்கின்றனர். அது மட்டுமா? ஜெர்மன் சோல்ஜர்களிடையே இதாலியைப்பற்றியும், விசேஷமாக முஸோலினியைப்பற்றியும் தீவிரமாக எதிர் பிரசாரஞ் செய்து வருகிறார்கள். முஸோலினி அவருடைய சுய நலத்தைக் கருதியே ஜெர்மானியருடன் சேர்ந்து, கோவிந்தம் போடுவதாக ஜெர்மன் சோல்ஜர்களிடையே அச்சடித்த துண்டுப் பிரசுரங்களை வழங்கி வருகின்றனர். அந்தப் பிரசுரங்களில், முஸோலினி, ஜெர்மனியைத் தாக்கி எழுதிய சில விஷயங்களை முக்கியமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற மகாயுத்த காலத்தில், அதாவது, 1915-ம் வருடம் முஸோலினி, ஜெர்மானியரைத் தாக்கிப் பல முறை எழுதியிருக்கிறார். "ஜெர்மனியர் இரத்த வெறி பிடித்தவர்கள், மிருகத்தனமுடையவர்கள், ஆகவே, அவர்களை அடியோடு ஒழித்துவிட வேண்டும்; ஜெர்மானியர் மனித வர்க்கத்துடன் சேர்த்துக்கொள்ளுவதற்கே லாயக்கற்றவர்கள்" என முஸோலினி எழுதியிருக்கிறார். அதையே ஜெர்மன் சோல்ஜர்களுக்கு எடுத்துக் காட்டி வருகிறார்கள். இதிலிருந்து அறியவேண்டியதென்ன? வெளிக்கு ரோம்-பெர்லின் அச்சு உறுதியாக இருந்தபோதிலும், உள்ளூர அது வெறும் குழாய்தான்; எந்த நிமிஷத்திலும் முறிந்து போகலாம். ஆகவே, அந்த அச்சைக் கண்டு பிரிட்டனோ, பிரான்சோ பயப்படவேண்டிய அவசியமில்லை. இன்று அந்த இருதேசங்களும் ஒன்று சேர்ந்து ஆண்மையுடன், ஜெர்மனியையும், இதாலியையும் எதிர்க்குமேயானால், ரோம்-பெர்லின் அச்சு தானாகவே முறிந்து போகும். பிரிட்டனும், பிரான்சும் குலைக்கிற நாய்களல்ல, அவை கடிக்கவும் துணிந்துவிடும்; கடித்தால் உரமாக கடிக்குமென்பதையும் காட்டிவிட வேண்டும். அந்த ஆண்மையும், உறுதியும் பிரிட்டனுக்கும், பிரான்சுக்கும் வருமா?

புதிய திட்டம்

ஐரோப்பாவிலுள்ள பால்கன் நாடுகளுக்குஏற்பட்டிருக்கும் ஆபத்தைக் கண்டு பிரிட்டனும், பிரான்சும் இப்பொழுது பயப்பட ஆரம்பித்திருக்கின்றன. பால்கன் பிரதேசங்கள் ஹிட்லர் வயிற்றுக்குள்ளோ, அல்லது, முஸோலினியின் வாய்க்குள்ளோ போய்விடுமேயானால், அதனால் பிரிட்டனுக்கும், பிரான்சுக்கும் பெரும் ஆபத்து என்பதை அவை உணர்ந்து விட்டன. பிரிட்டிஷ்-பிரஞ்சு மந்திரிகள் இடைவிடாமல் கூடி ஆலோசித்து வருகிறார்கள். அவர்கள் ஆலோசனையின் வேகத்தைப் பார்த்தால் அந்தநாடுகள் யுத்தத்துக்குத் தயாராக இருப்பதாகவே தெரிகிறது. ஒரு யுத்தம் வந்தாலொழிய, சர்வாதிகாரிகளின் திமிரை அடக்க முடியாது. அந்த யுத்தமும் சீக்கிரம் வரவேண்டும். காலதாமதமானால், ஐரோப்பாவில் பெரும்பாகம் சர்வாதிகாரிகள் வயிற்றுக்குள் போய்விடுவது நிச்சயம். ஒரு யுத்தம் வரக்கூடுமென்பதை அறிந்தே, ஹிட்லரும் முஸோலினியும் ஜரூராகக் காரியம் நடத்திக் கொண்டு போகிறார்கள். ஹிட்லர் ஒரு புதிய திட்டம் போட்டிருக்கிறார். அந்தத் திட்டத்துக்கு 1939-ம் வருடத் திட்டமென்று பெயர் கொடுத்திருக்கிறார். அந்தத் திட்டத்தில் ஜப்பானையும் சேர்த்திருக்கிறார். பிரிட்டனைப் பயமுறுத்தக்கூடிய வழியில் ஜப்பான் கிழக்கே நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்; மேற்கு ஐரோப்பாமீது ஹிட்லர் படையெடுத்துச் சென்று, ஸ்விட்சர்லந்து, ஹாலந்து, பெல்ஜியம் முதலியவைகளைக் கைப்பற்ற வேண்டும். மத்தியதரக் கடலில் பிரிட்டனை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய ஜெனரல் பிராங்கோவை ஹிட்லர் தூண்டிவருகிறார்; ஜிப்ரால்டரை பிராங்கோவுக்குக் கொடுத்துவிடவேண்டுமெனப் பிரிட்டனை வற்புறுத்தவும், ஹிட்லர் அவருக்கு யோசனை சொல்லிக் கொடுக்கிறார். கிழக்கே, இதாலி பிரிட்டனுக்குத் தொந்திரவு கொடுக்கவேண்டும்; சிரியா, இராக், இரான், ஆப்கானிஸ்தானம் முதலிய இடங்களில் புரட்சியை உண்டுபண்ணி, இதாலி ஏஜண்டுகளும், ஜெர்மன் ஏஜண்டுகளும் ரகசியமாக வேலை செய்ய வேண்டுமென்பது ஹிட்லரின் 1939-ம் வருட யுத்த திட்டம். இந்தத் திட்டப்படி, சர்வாதிகாரிகள் வேலை செய்யப் பிரிட்டனும், பிரான்சும் அனுமதிக்கக் கூடாது. பிரிட்டனும், பிரான்சும், இரு சர்வாதிகாரிகளையும் எதிர்த்துப் போர் ஆரம்பித்தாலொழிய, சர்வாதிகாரிகள் அவர்கள் திட்டத்தை நிறைவேற்றியே தீருவார்கள். பிரிட்டனும், பிரான்சும் வெறும் குலைக்கிற நாய்களாக இல்லாதபடி செயலளவில் சர்வாதிகாரிகளை மடக்க முன் வருவார்களாக. இன்றேல், பிரிட்டன்,பிரான்ஸ் முதலிய தேசங்களின் கோழைத்தனத்தால் உலகமே அல்லோலப்படவேண்டி வருமென்பது திண்ணம்.

காசநோயென்று கவலை வேண்டாம்!

நோயின் கொடுமையால் செய்யக் கூடாத செயல்களைச் செய்வதைக் காட்டிலும்

சி.எம்.சாமி தாளகபஸ்பம் உட்கொண்டு சுகம் பெறுங்கள்

புட்டி 1க்கு விலை ரூ-4

சிறந்த இருமல் மருந்து

காசம், க்ஷயம், ஈளை, இருமல், இளைப்பு, மார்சளி, சுவாசப்பை சம்பந்தமான சகல கெடுதல்களும் நீங்கும்.

பிராஞ்சு - 1/54 அருணசல நாயககன்தெரு சிந்தாதிரிப் பேட்டை மதறாஸ்

தலைமை ஆபீஸ் மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

மதராஸ் டி. சி. என்.

கோல்டன் மேடல் ஜ்வெலரி மார்ட்

பலவித அழகிய வளையல்கள்

அசல் தங்க வளையல்களைவிட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல.

கறுக்காது.

2 வருஷ உத்திரவாதம், மிகவும் அழகாக இருக்கும்

பெரிய சைஸ் 2 அகலமும் அதற்கு மேற்பட்டதும் ஜதை ரூ. 300

மத்திய சைஸ் $1\frac{3}{4}$'' முதல் 2''க்குள் ஜதை ரூ. 280

குழந்தை சைஸ் $1\frac{3}{4}$-க்கு உட்பட்டது ஜதை ரூ. 200

வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதை வரை அணா 8

அணிந்திருக்கும் வளையலின் சுற்றளவை இஞ்சியால் ஒரு காகிதத்தில் குறித்து அனுப்பவும்

டி. சி. நாகலிங்கப்பா அண்டு கோ,

280, வால்டாக்ஸ் ரோடு, பார்க் டவுன் மதராஸ்.

குறிப்பு:-"தமிழ் மணி" பெயரைக் குறிப்பிட்டு எழுதுகிறவர்களுக்கு மாத்திரம் விலையில் ரூபாய்க்கு ஒரு அணா வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

2 அணா பெறுமானமுள்ளதும், பல அழகிய படங்களுள்ளதுமான எமது கேட்லாக் இனாம்.

குறிப்பு:—ஸிலோன், பர்மாவுக்கு வி. பி. சார்ஜு அணா 12. மலேய நாட்டுக்கு ரூ. 2. மேற்கண்ட வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூரா கிரயமும் தபால் செலவும் ஆர்டருடன் அனுப்பவேண்டும்.

உடனே உபயோகித்துப் பாருங்கள்

உயர்ந்த வகையான **ரயில்வே மூக்குத்தூள்**

(ரெஜிஸ்ட்டர்டு)

ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள் பூர்ண திருப்தி யடைவீர்கள்

விலை 1 வீசை டின் ரூ. 3. $\frac{1}{2}$ வீசை 1-8. $\frac{1}{4}$ வீசை 0-12-6

அரைக்கால் வீசை 0-6-6. தபால் சிலவு பிரத்தியேகம்

ஒரே தடவையில் 4 வீசைக்கு ஆர்டர் கொடுத்து, அதின் கிரயத்தில் $\frac{1}{4}$ பாகம் முன்பணமாக அனுப்பினால் தபால் செலவு இனாம்.

எங்கும் ஏஜண்டுகள் தேவை. ஏஜண்டுகளுக்கு பிரத்தியேகமான விலை.

டி. ஹுசேய்ன், உயர்ந்த மூக்குத்தூள் தயாரிப்பவர்கள்,

70, எலிஸ் ரோட், மவுண்ட் ரோட், மதராஸ்.

உங்களுக்குத் தெரியுமா?

விவாகம் பரிசுத்தமான காரியம்; விவாகத்தை ஒரு புண்ணிய செயலாகக் கருதியே, சடங்கு, சாஸ்திரங்களுடன் உலகமெங்கும் நிறைவேற்றி வருகிறார்கள். விவாகத்துக்கென பல கட்டு திட்டங்களும், சட்ட ஒழுங்குகளுமுண்டு. சில அநாகரீக ஜாதியார்கூட விவாகத்தை எவ்வளவோ பரிசுத்தமாகக் கருதுகிறார்கள். மேனாடுகளில்கூட இந்த விவாகத்தைப் பரிசுத்தமாகவே கருதி வந்தார்கள். ஆனால், நாகரிகமாக ஆக இந்த விவாகம் மேனாடுகளில் கேலிக்கூத்தாகிவிட்டது; விவாகங்கள் சீரழிந்து போயின. பெண்களுக்கு உரிமை வேண்டுமென்ற ஒரு சித்தாந்தம் குறுக்கே புகுந்தது. பெண்களின் உரிமை, விவாகத்தின் பரிசுத்தத்தையே குட்டிச் சுவராக்கிவிட்டது. விவாகத்திலும் எத்தனையோ பிரிவினைகளை உண்டு பண்ணிவிட்டார்கள். கேவலம், மிருகங்களைப்போல், சிற்சில சமயங்களில் மிருகங்களிலும் கேவலமாக விவாகங்களை நடத்த முற்பட்டிருக்கிறார்கள். இந்த விவாகங்களில் பரீட்சார்த்த விவாகமென்று ஒன்றைக் கற்பித்திருக்கிறார்கள். இதின் அலங்கோலங்களை இங்கு சொல்லவும் முடியாது.

விவாக ரத்து

எவ்வளவுவோ பொருள் செலவிட்டு, உற்றார், உறவினர் அக மகிழ நடந்த விவாகங்களை நொடிப் பொழுதில் சின்னபின்னமாக்கி விடுகின்றனர். ஐரோப்பா, அமெரிக்க முதலிய நாடுகளில் விவாக ரத்துத் தினசரிக் காட்சியாக இருக்கிறது. கலியாணமாகி 10 நிமிஷங்களில் விவாகரத்துச் செய்து கொள்ளுகிறார்கள். வேறு சிலர், கலியாணமாகி 60, 70 வருடங்களுக்குப் பின், காடுவா, வீடு போ வென்று சொல்லக்கூடிய நிலைமையில் விவாக ரத்துச் செய்து கொள்ளுகிறார்கள். தள்ளாத வயதில், நடக்கக்கூடச் சக்தியற்ற நிலைமையில் 90 வயதுக் "குமரி", 100 வயது "குமரனை"யும், 110 வயது "குமரன்" 90 வயதுக் குமரியையும் கலியாணஞ் செய்து கொள்ளுகிறார்கள். 90 வயதுக் குமரிக்கு நல்ல பணமிருந்தால் 20 வயதுக் குமரனும், 100 வயது குமரன் பணக்காரனாக இருந்தால் 16 வயதுக் குமரியுங்கூடப் பெண்ணாகக் கிடைக்கிறார்கள். இது போன்ற வேடிக்கையான மணங்கள் எத்தனையோ உலகமெங்கும் இன்று நடைபெற்று வருகின்றன. இதில் ஆச்சரியமொன்றுமில்லை. இதுதான் கலிகாலம்.

7 முறை கலியாணம்!

படத்தில் காட்டியிருக்கும் இருவரும்! புதுத் தம்பதிகள். இவர்களுக்குக் கலியாணமாகி சுமார் 40 வருடங்களுக்கு மேலாகிறது. என்றாலும், இவர்கள் இருவரும் 6 முறை விவாக ரத்து செய்து கொண்டார்கள். ஆனால், பாவம்! இவர்களுக்கு வேறு பெண்ணோ, மாப்பிள்ளையோ கிடைக்கவில்லை. மீண்டும் இருவருமே மணந்து கொண்டார்கள். கடைசியாக சில வருடங்களுக்கு முன் இருவரும் 6ம் முறையாக விவாகரத்துச் செய்து கொண்டனர். பாழும் காதல் விடவில்லை. சில மாதங்களுக்கு முன் 7ம் முறையாகக் கலியாணஞ் செய்து கொண்டார்கள். அதனால்தான் இவர்களைப் புதிய தம்பதிகள் என்றேன். நான் கூறியது சரிதானென்று நீங்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ளுவீர்களென்று நம்புகிறேன். ஆனால், இந்தப் புதுத் தம்பதிகள் எங்கே இருக்கிறார்கள் தெரியுமா? இந்தியானா என்னுமிடத்திலுள்ள வல்பாரிஸோ நகரில் இன்றைக்கும் வசித்து வருகிறார்கள்.

6 அடி, 2½ அடி தம்பதிகள்!

விவாகங்கள் சில சமயங்களில் ரொம்ப வேடிக்கையாக இருக்கும். விவாகரத்துகூட அவ்வளவு பெரிய வேடிக்கையல்ல. மாப்பிள்ளை பெண் பொருத்தம் விசித்திரமாக இருக்கும். "ஆச்சி எருது போல், ஐயர் கதிர் போல்" என்ற பழமொழியை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அந்த மாதிரி பொருத்தமான மாப்பிள்ளை, பெண்ணுக்குக் கலியாணம் நடந்திருக்க நீங்கள் கண்டிருக்கலாம். ஆச்சி, அதாவது, மனைவி, எருமை மாடுபோல் இருக்க, எழுந்திருக்கப் பரம சங்கடப்படுவாள். அப்பேர்ப்பட்ட பெண்ணுக்கு துரும்புபோல் இளைத்திருக்கும் மாப்பிள்ளை கிடைத்திருப்பார். வேறு சில மாப்பிள்ளைகள் வைக்கோல் போர்போல், மெலிந்திருப்பார்கள். அவர்களுக்குக் கிடைத்திருக்கும் பெண்களோ துரும்புபோலிருப்பார்கள். கீழே தள்ளினால் உயிர் போய்விடும்! இதுவும் ஒருவித பொருத்தமான மணந்தான்! வேறு சில குடும்பங்களில் மாப்

(அடுத்த பக்கம் பார்க்க)

ஆனந்தம் மனோ உற்சாகம்

உடையவர்களாயிருக்கவேண்டுமாகில் நீங்கள் எல். ஜி. பெருங்காயத்தையே வாங்கி உபயோகியுங்கள். லட்சக்கணக்கான மக்கள் அதன் அருமையை அறிந்து அதையே வாங்கி உபயோகிக்கிறார்கள்.

எல். ஜி.

பெருங்காயமானது

எல்லா பெருங்காயங்களிலும் தலை சிறந்தது

நீங்கள் பெருங்காயம் வாங்கும்போது

எல். ஜி. மார்க் போட்டிருக்கிறதாவென்பதைக் கவனித்து வாங்குங்கள்

போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்

லால்ஜி கோது அன் கோ,

சௌகார்பேட்டை, மதராஸ்.

ஆச்சரியம்! 24-மணி நேரத்தில் குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும் முந்துங்கள்!!

நீங்கள் என்றுமழியாத இளம் பருவத்தை அடைந்து தாதுபுஷ்டியில் மன்மதனேவென மயங்கச்செய்யும்

"பஞ்சாமிர்தம்" (ரிஜிஸ்டர்டு)

வெள்ளை என்னும் கொடிய ரோகத்திற்கும், தாதுபுஷ்டிக்கும் கைகண்டது. ஆச்சரியமானது; உத்திரவாதமும் நம்பிக்கையுமுள்ளது. இதைப் போல் வேறு மருந்து கிடைப்பதரிது. இந்த டானிக்கை பிரதி தினமும் இரண்டு வேளை ஆகாரத்திற்குப் பிறகு சாப்பிட்டுக்கொண்டு வர 4448 வியாதிக்கும் தலை அரசனான வெள்ளை என்னும் கொடிய வியாதியை பற்றறக் கண்டித்து கை கால் அசதி, இடுப்பு வலி, பலக் குறைவு, ஆயாசம், நரம்புத் தளர்ச்சி, சொர்ப்பன ஸ்கலிதம், பசி இன்மை, மலச் சிக்கல், அஜீர்ணம், பித்த மயக்கம், கை கால் நடுக்குதல், கீல் பிடிப்பு, தீரேகம் மெலிந்து க்ஷீணித்தல், எலும்புருக்கி, இருமல், அஸ்த்தி, வெட்டை, ஸ்திரீகளுக்கு சூதக சமயத்தில் உண்டாகும் வலி, பெரும்பாடு அதிகமான சந்தானத்தினால் சரீர உறுப்புக்கள் பலஹீனப் படுதல், ஸ்திரீகளுக்குண்டாகும் வெள்ளை, இவைகளை நிவர்த்தி செய்து தளர்ந்து துவண்டு மெதுவுப்பட்ட ராஜக் கருவிகள் முறுக்கேறி சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்து துரித ஸ்கலிதத்தை பற்றறுத்து கபூம்ஸத்தை போக்கடிக்கும். கை கண்டது, பத்தியமில்லை; அதிக உஷ்ணத்தைத் தணிக்கும்.

வி. பி. செலவு பிரத்தியேகம்:—பர்மா, சிலோன், சிங்கப்பூர் முதலிய வெளி நாட்டார் முன் பணம் அனுப்பவேண்டும்.

40 வேளை அல்லது 8 அவுன்ஸ் மருந்து கிரயம் ரூ. 3—0—0

எமது விலாசம்:—ஸ்ரீ மகாலக்ஷிமி வைத்தியசாலை, 24 பெரிய தம்பி முதலி வீதி, வேப்பேரி போஸ்டு, மதராஸ். (சூளை மில்லுக்கு அருகில்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை 6 அடி இருந்தால் பெண் 3 அடி உயரமிருப்பாள். இன்றேல், பெண் 7 அடி இருந்தால், மாப்பிள்ளை 4 அடி உயரந்தானிருப்பார். இதற்குப் படத்தில் காட்டியிருக்கும் சதிபதிகள் நல்ல உதாரணம். இவர்கள் டொரான்ட் நகரில் வசித்து வருகிறார்கள். மாப்பிள்ளை 6 அடி உயரம். பெண் 2½ அடி உயரந்தான்! நல்ல பொருத்தமான சதிபதிகள் அல்லவா?

60 வருடம் படுக்கை!

இது போன்று எத்தனையோ அதிசயங்கள் உலகிலிருக்கின்றன. வேறு சில ஆடவர், பெயரளவில்தான் ஆடவர். அவர்களுக்கு ஆண்மையென்பது கிடையாது; துரும்பைக் கண்டாலும் பயம். இரவு வந்துவிட்டால் நடுக்கந்தான்! வீட்டை விட்டு வெளியில் போக மாட்டார்கள். உயிர் அவர்களுக்குச் சர்க்கரை. இந்தக் கோஷ்டியில் சேர்ந்தவர் ஒரு

ஜெர்மானியர். இவர் பெயர் பிரிட்ஜ் பேபல். இவர் மூனிச் நகரில் வசித்து வந்தார். நோய் வந்தால் உயிர் போய் விடுமேயென்று பயந்து 60 வருடங்களாகப்படுத்த படுக்கையிலேயேயிருந்தார். சாப்பாடுகூட படுக்கையில்தான் நோய் பட்டவர்களைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார். இரவு பகலாக வேலைக்காரர் அவர் அருகில் காத்திருக்க வேண்டும். நோய்க்குப் பயந்து, உயிரையும், உடலையும் அவ்வளவு பத்திரமாகப் பாதுகாத்து வந்தார். ஒருநாளிரவு கண்ணை மூடித் தூங்கினவர்தான், மீண்டும் எழுந்திருக்கவேயில்லை; அவர் 60 வருடங்களாக அருமையாகப் பாதுகாத்து வந்த உயிர் எப்படியோ மாயமாக மறைந்துவிட்டது!

தவளைகள் விபரீதம்!

பாம்பு, பல்லி, தவளை முதலிய பிராணிகளிடம் ஒருவித அபூர்வமான குணங்களிருக்கின்றன. அவைகள்பொரித்த குஞ்சுகளை அவைகளே பிடித்துத் தின்று விடுகின்றன. அவைகளின் கண்ணுக்குத் தப்பிப் பிழைக்கின்றவைதான் உயிரோடிருக்க முடியும். பாம்பு, பல்லி ஆமைகள் முதலியவை உலகில் அதிகமாகப் பெருகிவிடக் கூடாதெனக் கருதி, ஆண்டவன் அவைகளுக்கு இந்தப் புத்தி கொடுத்திருக்கிறார் போலும்! படத்தில் காட்டியிருக்கும் ஒருவிதத் தவளைகளும் இந்த இனத்தைச் சார்ந்தவைதான். அவை பொரிக்கும் குஞ்சுகளை அவை பிடித்துச் சாப்பிட்டு விடுகின்றன.

நீ இழந்த பலத்தை

திரும்பவும் பெற்று

இல்லற சுகத்தை வல்லமையுடன் அனுபவிக்க
பிரியப்படுகிறீர்களா? அப்படியானால்
பழனி ஆர். எம். கே.
மகா வீரிய தங்க மாத்திரையை
மகா மன்மத காமகேசரி
சாலாமிசிரி ஹல்வாவில் சாப்பிடுங்கள்
உங்கள் மனக்கவலையை நீக்கி அடங்காத
தாது புஷ்டியைக் கொடுத்து தம்பதிகளை
* மகிழ்விக்கச் செய்யும் *
50-தங்க மாத்திரை 50-ஹல்வா உருண்டை
செலவு உள்பட ரூ. 5—12—0
குணம் இல்லாவிடில் ரூ. 5-12-0 வாபீஸ்

R. M. K. சிவசுப்ரமண்யம்

சித்த வைத்தியசாலை, பழனி. S. I.

பிராஞ்சு:—திருவல்லிக்கேணி ஹைரோடு சென்னை.

ஆனந்தகரமான 5-வது வாரம்

சென்னை பாரகன் டாக்கீஸில்

தினசரி 3-காட்சிகள்

ஜோதி அல்லது

ராமலிங்க சுவாமிகள்

பாட்டு:-
மதுரை மாரியப்ப சுவாமிகள்

பல வர்ணம் தீட்டிய மிஸ் பட்டம்மாளின்
அபிநயக் கட்டம் பார்க்கத்தக்கது.

மதுரை-சென்டிரல் சினிமா 4 வது வாரம்
சேலம்-சென்டிரல் டாக்கீஸ் 3-வது வாரம்
கும்பகோணம் டைமண்டு சினிமா 2 வது வாரம்

படத்தின் பாடல்களை "ஓடியனில்" கேளுங்கள்.

தயாராகிறது
எமது அடுத்த படம் **ஆராய்ச்சிமணி**
(மனுநீதி கண்ட சோழன்)

விபரங்களுக்கு:-
ஜோதி பிக்சர்ஸ் லிமிடெட்., மதராஸ்.

ஆப்ரேஷன்
தேவையில்லாமல்

"டான்ஸ்லிட்"

என்னுமிந்த பரம ஔஷதம் தொண்டையின் உள்நாக்கின் இரு பக்கங்களிலும் நாசித்துவாரங்களிலும் சதை வளர்ந்து சுவாசடைப்பை உண்டாக்கி கஷ்டப்படுபவர்களுக்கு இது அற்புதமாய் குணப்படுத்தும். இந்த அருமை வாய்ந்த மருந்திற்குக் கிடைத்திருக்கும் சர்டிபிகேட்டுகளைக் கணக்கிடல் முடியாது.

விவரங்களுக்கு:—

ஆலன்கிலினிக்
இராயப்பேட்டை, மதராஸ்.

விலை ரூபா 1-0-0



மற்றெல்லா மருந்து ஷாப்புகளிலும்
கிடைக்கும்.

மாதங்கள் வேண்டாம் நாட்களும் வேண்டாம்;
ஒரே ஒரு மணி நேரத்தில்
வீரிய ஸ்தம்பனம்
ஏற்பட
ரமண விலாசினி வடிகா
உபயோகியுங்கள்.
ஒரு டப்பி விலை ரூபா 1—0—0
மதனமஞ்சரி பார்மஸி,
1-94, சைனபஜார், மதராஸ்.

டிரேட்மார்க்
லேபில் டிசைன்
முதலியவைகளை
கல்கத்தா ரிஜிஸ்டர்
செய்ய
ஜி. ஏ. ஒர்க்ஸ்,
6. பந்தர்தெருவு, மதராஸ்.

நீங்கள்
மறந்துவிட வேண்டாம்
எதை?



ராலி
அலாரம் கெடியாரத்தை

உலகப்பிரசித்தி பெற்ற "ராலி" அலார கெடியாரம், அழகிலும், அமைப்பிலும், உழைப்பிலும் ஒப்புயர்வற்றது.

விலை ரூ. 4-4-0
தபால் செலவு பிரத்தியேகம்

4 அங்குல டயலுடையது. தூசியால் கெட்டுப் போகாது; நிக்கல் மூடி; உறுதியான அலாரம் மணி.

2 வருடங்களுக்கு உத்திரவாதம்

ஜலால் அண்டு சன்ஸ்,
(கவர்ன்மெண்ட் கண்ட்ராக்டர்ஸ்)
மதராஸ், ஹைதராபாத்.

விக்கர்ஸ் தையல் மெஷின்கள்

நவீன முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டது

இந்தத் தையல் மெஷின்கள் யாவும் உயர்ந்த ரகங்கள்:—வெகு நேர்த்தியாக அமைக்கப்பட்டவை. இந்த மெஷின்களுக்கு ஊசி பார்ஸ் லாட்கள் குண்டு. இதின் விசேஷமென்னவென்றால், ஊசியை அதிக உயரத்திலோ, தாழ்வாகவோ கொண்டுபோகாமல், வேண்டிய அளவுக்கு ஊசியை வைத்து, இலகுவாகத் தையல் வேலை செய்யலாம். இதுமட்டுமல்ல, முன் பக்கமும், பின்பக்கமுமாகத் தைப்பதற்கும் முடியும். தையல் வேலை செய்துகொண்டிருக்கும் போது துணியை மெஷினிலிருந்து அகற்ற வேண்டிய அவசியமே இல்லை.



இப்பொழுது விலை
ரூ. 92-8

ஸ்பென்ஸர் & கம்பெனி, லிமிடெட்.,
ஹார்டுவெயர் டிபார்ட்மெண்ட், மதராஸ்.

மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோக பயிற்சி முறையும்

மோட்டார்கார் ஓட்டவும், மோட்டார்கார் பாகங்களை கழற்றவும், பூட்டவும் ரிப்பேர் முதலான வேலைகள் தெரிந்துகொள்ளவும் விரும்புகிறவர்கள் எங்களிடமுள்ள "மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோக முயற்சி முறையும்" என்ற நூலை வாங்கிப் படித்து பயன் பெறுவார்களாக சித்திரங்களுடன் வெளிவந்திருக்கிறது. இப் புத்தகத்தை வாங்கிப் படிப்பவர்கள் அதிக நன்மையடைவார்கள். சொற்ப அநுபோகமுள்ள மோட்டார் கார் டிரைவர்களும் இப் புத்தகத்தை படிப்பதினால் தங்களிடத்திலுள்ள குறைகளை நிவர்த்தித்துக்கொள்ளலாம்.

புத்தகம் 1.க்கு விலை ரூ. 2-0-0
தபால் செலவு ரூ. 0-6-0

முன் பணமாக ரூ. 2-6-0
அனுப்பப்படவேண்டும்.

மானேஜர்,
"தமிழ் மணி" சென்னை.

எதிர்பாருங்கள்! விரைவில்!!

1000 வருடங்களுக்கு முன் தோன்றிய குயவர் கோமானின் திவ்விய சரித்தையை வெகு அழகுடன் சித்திரிக்கும் புராணப்படம்.

உங்களூர் பிரபல
வெள்ளித்திரையில் வெளிவரும்
நன்னாளை எதிர்பாருங்கள் !!!

திருநீலகண்டர்
(தமிழ்)

—: நடிகர்கள் :—

எம். கே. தியாகராஜ பாகவதர்,
செருகளத்தூர்-சாமா, எஸ். ஜி. செல்லப்பா, கொத்தமங்கலம்-சுப்பு, என். எஸ். கிருஷ்ணன், மிஸ். பாப்பா, எஸ். எஸ். ராஜாமணி, பாலசரஸ்வதி, டி. ஏ. மதுரம், வி. சுப்புலக்ஷிமி, சுசிலாதேவி முதலியோர்.

டைரக்டர்: பி. கே. ராஜா சாண்டோ.
பாடல்: பாபநாசம்-சிவன்.
கதை வசனம்: இளங்கோவன்.

இப்படத்தின் பாடல்களை "ஓடியன்" ரிகார்டுகளில் கேளுங்கள்.

கைவசமுள்ள படம்
சத்தியசீலன்

விவரங்களுக்கு:- தியாகராஜ் பிலிம்ஸ் லிமிடெட்.,
தந்தி:-THYGARAJ. திருச்சினாப்பள்ளி. போன்:-102.

M. A. CHARI & Co.,
Ophthalmic Opticians,
9-9, BROADWAY, MADRAS.

இந்தியா
தனிப்பிரதி
விலை அரையணா
இலங்கை
இந்தியாவுக்கு
வருட சந்தா 2-8-0.
இலங்கையில்
தனிப்பிரதி சதம் 5
ஆறு மாதத்திற்குக்
குறைந்த சந்தா
கிடையாது.

தமிழ் மணி

பர்மா, மலாய்
தனிப்பிரதி 0-1-3.
வருட சந்தா
ரூ. 4—0—0
ஒரு வருஷத்திற்கு குறைந்த சந்தாவுக்குப் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

ஏழை என்றும் அடிமை யென்றும் எவனுமில்லை, ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே

என்று தணியு மிந்த சுதந்திர தாகம் ?
என்று மடியு மெங்கள் அடிமையில் மோகம் ?—பாரதி

இந்தியாவின் உயிர் நாடி போன்றது விவசாயம்

அந்த விவசாயத்துக்கு உயிர் கொடுப்பது எப்படி ?

இந்தியரால்
இந்தியர் மூலதனத்தால்
இந்தியர் உழைப்பால்

உற்பத்தி செய்யப்படும் ரொட்ரிக்ஸ் - - - - கம்பெனியாரின்

இயற்கை உபாபஸ் எருக்களை

உபயோகிப்பதே அதற்கு வழி

கலப்பை மார்க் இயற்கை உரம்

இந்த உரத்தை
உபயோகித்து
உங்கள் மாசூலைப்
பெருக்குங்கள்.

*

எங்கள் உரத்தை
விற்பனை செய்வதற்கு
முக்கியமான இடங்களில்
ஏஜண்டுகள் தேவை:—

விவரம் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்

ரொட்ரிக்ஸ் & கம்பெனி, போன் மில்ஸ், கடம்பூர் S. I. Ry., (திருநெல்வேலி ஜில்லா)

எ. எஸ். டி. எப். ரொட்ரிக்ஸ், காட்பாடி போன் மில்ஸ், காட்பாடி M. S. M. Ry., (வட ஆற்காடு ஜில்லா)

வாரங்கால் போன் மில்ஸ், வாரங்கால் (நிஜாம்) | **வால்டயர் போன் மில்ஸ்,** வால்டயர் (B. N. Ry.,)

இன்னமும் தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கியமான ஊர்களிலும் பிராஞ்சுகள் உண்டு.

Edited, Printed and Published by, P. ALBIN at the "TAMIL MANI" Press. 21, Sembudoss St., G. T. Madras.